ISSN 2012 - 6700

# பூங்காவனம்


2010 மே இதழ் ~ 01



திருமதி. பவானி சிவகுமாரன்

கலை இலக்கிய சமூக சஞ்சிகை

Best Queen Foundation வெளியீடு





Best Queen Foundation
வெளியீடு

# பூங்காவனம்

இதழ் 01
ISSN 2012 - 6700


நிர்வாகக்குழு

ரிம்ஸா முஹம்மத்
எச்.எப். ரிஸ்னா
டப்ளியு.எம். வஸீர்
கினியனூர் இஸ்மத்

ஆலோசனைக்குழு

திருமதி. பாயிஸா கைஸ்
திருமதி. சுஹைதா ஏ. கரீம்
திருமதி. ஜரீனா முஸ்தபா

வங்கித் தொடர்புகளுக்கு

Commercial Bank,
Mount Lavinia Branch
Best Queen Foundation,
A/C No. :- 8930016177.

என்ற இலக்கத்திற்கு காசு, காசோலைகளை வைப்பிலிடுவோர் பற்றுச் சீட்டுக்களை எமக்கு அனுப்ப வேண்டும். காசுக் கட்டளைகளாயின் அதற்கான பற்றுச் சீட்டுக்களையும் எமக்கு அனுப்ப வேண்டும்.

தனிப்பிரதி - 80/=
தபால் மூலம் - 100/=
வெளிநாடு - 2.5$

தொர்புகளுக்கு


"Poongavanam"
21 E, Sri Dharmapala Road,
Mount Lavinia,
Sri Lanka.

**Email:-**
bestqueen12@yahoo.com

**Website:-**
www.bestqueen12.blogspot.com

**Phone:-**
0094 (0) 77 5009 222
0094 (0) 719 200 580


புதிய ஆக்கங்களும், இச்சஞ்சிகை பற்றிய விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு அனுப்புபவர்கள் நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப்படுத்த நிர்வாகக்குழுவுக்கு உரிமையுண்டு.

# உங்களுடன் ஒரு நிமிடம்!

இலங்கையில் இன்று புற்றீசல்கள் போன்று பல சஞ்சிகைகள் வந்து காணாமல் போகின்றன. இன்னும் இன்னும் வெளிவந்து கொண்டுமிருக்கின்றன. இந்த வகையில் வாசிப்பின் தேடலை மேம்படுத்தவும், வளரிளம் படைப்பாளிகளை அறிமுகப்படுத்தவும், பெண்களை ஊக்கப்படுத்தும் தூய நோக்கத்துடனும் பூங்காவனத்தின் முதலாவது இதழ் பல தடைகளுக்கு மத்தியிலும் சிறப்புற வெளிவந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். அத்துடன் இந்த பூங்காவுக்குள் நுழையும் எமது வாசகர்களை வரவேற்பதிலும் மகிழ்ச்சிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று பெண்களின் குரல் பல துறைகளிலும் ஒலித்துக்கொண்டிருப்பதாக பெருமைப்பட்டுக்கொண்டிருந்தாலும் திருமணம் என்ற வரையறைக்குள் கட்டுப்பட்ட பெண்களில் அநேகமானவர்கள் பலவந்தமாக எழுத்துத் துறையிலிருந்து விலக்கப்படுகிறார்கள். பாடசாலை மாணவர்களின் வாசிப்புப்பழக்கத்தை ஆராய்ந்து பார்த்தோமேயானால், அதன் வீழ்ச்சிப்போக்கு எந்தளவில் இருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ளலாம். அது மட்டுமன்றி குறிப்பிட்ட சில சஞ்சிகைகள் மூத்த எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மட்டுமன்றி குறிப்பிட்டவர்களின் ஆக்கங்களை மட்டுமே பிரசுரித்து வருவதும் கண்கூடு. இவையெல்லாம் கசப்பான உண்மைகள்.

எமது இந்த சிறுமுயற்சியின் நோக்கம் என்னவெனில் வளர்ந்த எழுத்தாளர்கள், வளரிளம் எழுத்தாளர்கள் என்ற பேதங்களைத் தகர்த்து தரமான எழுத்துடைய அனைவருக்கும் களம் அமைத்துக் கொடுப்பதே ஆகும்.

Best Queen Foundation வெளியிடும் பூங்காவனம் எனும் முதல் சஞ்சிகையானது, ஆரம்பத்திலேயே சோக நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்திருக்கிறது. எண்களின் அதிர்ஷ்டங்கள், பலன்களைக் கூறி தொழில் செய்யும், விஷேடமாக ஒரே பத்திரிகையில் பல விளம்பரங்களை கொடுத்துக் கொண்டிருக்கும் பிரபலங்களில் ஒருவர் எமது எண்ணங்களை புரிந்தது போல் எமது முதல் சஞ்சிகை வெளியீட்டுக்காக விளம்பரம் தந்து உதவுவதாய் கூறினார். ஆனால் அவரால் அந்த உதவியை செய்திட முடியாத கட்டத்தைக்கூட முகம் மலர்ந்து கூறியிருந்தால் அது எங்களுக்கு மனக்கஷ்டத்தை தந்திருக்காது. அப்படியில்லாமல் எம்மை பல தடவைகள் அலைக்கழிக்கச் செய்து கடைசி நேரத்தில் அவரது வாய்வார்த்தைகளில் பொய்யைப்பூசிக் கொண்டது முதலில் எமக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்ததும் அனுபவமே. இது தான் அவர்களது பெருந்தன்மையா?

ஆகவே எமது இந்த முயற்சிகளுக்கும் அப்பால் தொடர்ந்தும் பூங்காவனத்தை வெளியிடுவதற்காக படைப்பாளிகளினதும், வாசகர்களினதும், விளம்பரதாரர்களினதும், தனவந்தர்களினதும் பங்களிப்பு என்றும் மகத்தான பணியாக இருப்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இறுதியாக கவிதைகள், சிறுகதைகள், இலக்கிய கட்டுரைகளுடன் வாசகர்களின் மேலான கருத்துக்களையும் எதிர்பார்த்திருக்கிறது பூங்காவனம்.

**- நிர்வாகக்குழு -**





# பூங்காவினுள்ளே...


## நேர்காணல்

பவானி சிவகுமாரன்

## கவிதைகள்

வெலிகம ரிம்ஸா முஹம்மத்
பதுளை பாஹிரா
ஏ.சி. ஜரீனா முஸ்தபா
எஸ். ஜனூஸ்
வி. விஜயகாந்த்
நஸீஹா ஹலால்தீன
எஸ். ஷரஃபா
அக்கரையூர் அப்துல் குத்தூஸ்
மாவனல்லை ரிஷான் ஷெரீப்
தஃமான் எம். மாஹிர்
ஆர். சதாத்
சுங்காவில் ரியாழ்
எஸ். நுஹா
புசல்லாவ கணபதி
வெலிகம ஸிஹ்னா நவாம்
தியத்தலாவ ஸப்ராஸ்
ஏ. ஆமிரா
தர்காநகர் நிஸ்வா ஸலாம்
யோ. புரட்சி
மன்னார் அமுதன்
இளைய அகத்திமுறிப்பான்
சீனன்கோட்டை பாயிஸா கைஸ்
புன்னகை வேந்தன்
கிளியனூர் இஸ்மத்
மணற்றி ஞாயிறு
நல்லூர் யாழினி
ச. முருகானந்தன்
பாணகமுவ ரபாய்தீன்
பேருவளை ரபீக் மொஹிடீன்
குறிஞ்சி நிலா
என். சந்திரசேகரன்
தர்காநகர் றம்ஸியா
கலைமகன் பைரூஸ்
கிண்ணியா எஸ். பாயிஸா அலி

## சிறுகதைகள்

இளைய அப்துல்லாஹ்
தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

## கட்டுரைகள்

கா. விசயரத்தினம்
கோவை அன்ஸார்
டப்ளியு.எம் வஸீர்
ஏ.ஜே.எம். பிறவ்ஸ்
சந்திரகாந்தா முருகானந்தன்

## விமர்சனம்

நிலாக்குயில்



# பவானி சிவகுமாரன் அவர்களுடனான ஒரு நேர்காணல்

சந்திப்பு :-
தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

**''ஆற்றொழுக்கமான நடை, பிரதேசப்பேச்சு, வழக்கிலமைந்த உரையாடல்கள், மொழியாட்சி என்பன நல்ல சிறுகதைக்கு மிக அவசியம்.......''** என்கிறார் பூங்காவனம் அட்டைப்படத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் பிரபல சிறுகதை எழுத்தாளரான பவானி சிவகுமாரன் அவர்கள். அவரிடமிருந்து பகிர்ந்து கொள்ளப்பட்ட பயன்மிகு கருத்துக்களை பூங்காவனம் வாசகர்களுக்காக தருகிறோம்.

**உங்களைப்பற்றிய அறிமுகத்தை பூங்காவனம்' வாசகர்களுக்காக கூறுங்கள்?**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாக கொண்ட நான் குடும்பத்தின் மூத்த மகள். மூன்று சகோதரிகளும், ஒரு சகோதரனும் கூடப்பிறந்தவர்கள். என் தந்தை திரு. சு.சி. கதிரவேலு அவர்கள். இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றியவர். தொழில் ரீதியாக நான் ஓர் ஆங்கில ஆசிரியை. தற்பொழுது அதிபர் சேவைக்கு தெரிவாகியுள்ளேன். நான், கணவன், மகள் என்ற மூவரடங்கிய சிறிய குடும்பம் என்னுடையது. எனது கணவர் தனியார் நிறுவனமொன்றின் பணிப்பாளர். சிறுகதைத்துறையில் மரம் வைத்தவன், தேடலே வாழ்க்கையாய் எனும் இரு சிறுகதை தொகுதிகளை வெளியிட்டுள்ளேன். 'மரம் வைத்தவன் எனும் என் முதல் நூலுக்கு அரச சாகித்திய விருது கிடைத்தது.





**உங்களது எழுத்துலக பிரவேசம் குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பயின்ற காலத்தில் அக்கல்லூரி தமிழ்ச்சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதன்முதல் பங்கேற்றேன். பயிற்சி பெறும் ஆசிரியர்கள் மட்டுமே பங்கேற்ற அப்போட்டியில் எனக்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. இவ்வாறு தான் எனது எழுத்துலக பிரவேசம் நிகழ்ந்தது.

**சிறுகதைகள் எழுத வேண்டும் என்ற ஆவல் உங்களுக்கு ஏற்பட்டதற்கான காரணம் என்ன?**

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பரிசுக்கதைக்குப் பின் பன்னிரெண்டு வருடங்கள் நான் எழுதவே இல்லை. நம்புங்கள். இதன் பின் வீரகேசரி பவள விழா விளம்பரம் பார்த்து எழுதினேன். நாடளாவிய ரீதியில் நடைபெற்ற அப்போட்டியில் எனது கதை தெரிவு செய்யப்பட்டது. பங்கேற்கும் போட்டிகளில் எல்லாம் என் கதைகளுக்கு பரிசில்கள் கிடைத்ததால் என் எழுத்துக்கு ஓர் அங்கீகாரம் இருப்பதாய் உணர்ந்தேன். இதுவே சிறுகதைகள் எழுத வேண்டும் என்ற ஆவலை என்னுள் விதைத்தது.

**உங்கள் சிறுகதைகளில் யதார்த்தமான விடயங்கள் தான் அதிகமாக இருக்கின்றன. யதார்த்தம் படைப்பாகின்ற போது தான் அது முழுமையாகின்றது என எண்ணுகின்றீர்களா?**

நிச்சயமாக. யதார்த்தம் இல்லாத எந்த இலக்கியமுமே முழுமை அடைவதில்லை. சிறுகதைகளின் பண்புகளில் ஒன்று, தான் சார்ந்த சமூகத்தை அது பிரதிபலிப்பது தான். நான் பார்த்த, கேள்வியுற்ற, என்னை ஏதோ ஒரு விதத்தில் பாதித்த சம்பவத்தை கதை வடிவில் வெளிக்கொணர்கிறேன். நாம் அங்கம் வகிக்கும் சமூகத்தை இவை பிரதிபலிப்பதால் இவ்வாறான கதைகளையே வாசகர்களும் விரும்புகிறார்கள்.

**'மரம் வைத்தவன்', 'தேடலே வாழ்க்கையாய்' போன்ற சிறுகதைத் தெ குப்புகளை வெளியிட்டிருக்கிறீர்கள். அவற்றில் உங்களுக்கு பிடித்தமான கதைகள் என்ன? ஏன்?**




நான் எழுதியவை எல்லாமே எனக்கு பிடித்தவை தான். குறிப்பாக 'இலவு காக்கும் கிளிகள்', 'புதை மணலா நீ டானியலா?', 'வெளிச்ச வீடு', 'விலகும் மழை மேகம்' போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

'இலவு காக்கும் கிளிகள்' ஒரு ஆபிரிக்க போராளியை அவனைச் சூழ்ந்துள்ள அவலத்தை பேசுகிறது. கதை இயல்பாக இருக்க வேண்டும் என்பதற்காக ஊர்கள், பெயர்கள் போன்றவற்றை 'இன்டர்நெட்' ஊடே பெற்றேன். இது போல் 'புதை மணலா நீ டானியலா?' ஒரு நாட்டில் நடந்த கதையை ஐரோப்பிய நாடொன்றில் நடப்பதாய் எழுதுவது போல ; சில மாற்றங்களை செய்ய வேண்டியிருந்தது. இதில் நான் வெற்றி கண்டிருப்பதாய் நினைக்கிறேன்.

ஊருக்கெல்லாம் வெளிச்சம் கொடுத்து இன்று ஒளியிழந்து நிற்கும் வெளிச் வீட்டை ஒரு பெண்ணுக்கு ஒப்பிட்டு எழுதப்பட்ட கதை 'வெளிச்ச வீடு'. ஒரு கூத்துக்கலைஞன் பற்றியது 'விலகும் மழை மேகம்'. ஒரு கலையை மையமாக வைத்து எழுதப்பட்டது. இதற்கு சரியான முறையில் பாடல் வரிகள் இடம் பெற வேண்டும் என்பதற்காக கூத்து சம்பந்தப்பட்ட புத்தகங்களை விலைகொடுத்து வாங்க வேண்டியிருந்தது. நூலுருவில் இன்னும் வெளிவராத எனக்குப்பிடித்த கதைகள் இருக்கின்றன.








**உங்கள் படைப்புகளுக்குக் கிடைத்த விமர்சனங்கள் எவ்வாறு இருந்தன?**



நான் கதை எழுதி முடிந்தவுடனேயே என் ஆசிரியர் குழாமிடமிருந்து சுடச்சுட விமர்சனங்கள் கிடைத்துவிடும். உலகளாவிய ரீதியில் எனக்கு முதற் பரிசை ஈட்டித்தந்த 'அற்ற குளத்துப் பறவைகள்' என்ற கதையைப் போட்டிக்கு அனுப்ப முன் அதை வாசித்த ஆசிரியர் ஒருவர் 'நிச்சயம் இதற்கு பரிசுண்டு' என்று சொன்னார்.

என் புத்தக வெளியீட்டில் கலந்த கொண்ட பேச்சாளர்கள், வெளிச்ச வீடு, இலவு காக்கும் கிளிகள், தேடலே வாழ்க்கையாய் போன்ற பல கதைகளை சிலாகித்துப் பேசினார்கள். என் கதைகளுக்குக் கிடைத்த விமர்சனங்கள் எல்லாம் உற்சாகமூட்டும் டொனிக் என்று தான் சொல்ல வேண்டும்.

**சிறுகதைகள் என்றால் அவற்றில் முக்கியமாக எந்தெந்த அம்சங்கள் இடம் பெற வேண்டும் என்று சொல்லுங்கள்?**

முதலில் நல்ல கரு அமைய வேண்டும். அதன் பின் அதனைச்சுற்றிப் பின்னப்படும் இசைவான சம்பவங்கள், சம்பவத்தின் துணையோடு அவற்றைக் கொண்டு செல்லும் ஆற்றொழுக்கமான நடை, பிரதேசப்பேச்சு, வழக்கிலமைந்த கதைக்கு வலுவூட்டும் உரையாடல்கள், எல்லாவற்றிற்கும் மேலாக கதாசிரியரின் மொழியாட்சி. இவை யாவும் நல்லதொரு சிறுகதைக்கு அவசியம்.

**உங்களுக்கு இதுவரை கிடைத்த பரிசுகள், விருதுகள் பற்றிச் சொல்லுங்கள்?**

முதல் சிறுகதைத் தொகுதியான 'மரம் வைத்தவன்' தொகுதிக்கு 2007ம் ஆண்டு அரச சாகித்திய விருது கிடைத்தது.

உலகளாவிய ரீதியில் பூபாள ராாகங்கள் நடாத்திய சிறுகதைப் போட்டியில் 'அற்ற குளத்துப் பறவைகள்' என்ற கதைக்கு 2006ல் முதற்பரிசு கிடைத்தது.

கலாபூஷணம் புலோலியூர் சதாசிவம் ஞாபகர்த்தப் போட்டியில் 2009ல் 'நம்மவர்கள்' சிறுகதைக்கு முதற்பரிசு கிடைத்தது.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தமிழ்ச்சங்கம் சிறுகதைப் போட்டியில் 'பார்வைகள்!? மனிதர்கள்!?' ற்கு இரண்டாம் பரிசு கிடைத்தது.

தகவம் அமைப்பினரின் சிறப்புப் பரிசு இரு தடவைகள் கிடைத்தன. அவை 'விலகும் மழை மேகம்', 'கனவுலகின் வெளியே' என்பனவாகும்.

வீரகேசரி பவளவிழாப் போட்டி பரிசுக்கதை 'உறவைத் தேடும் தீவுகள்'.

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்கப் பரிசுக்கதை 'கருணை இன்னும் சாகவில்லை'.

அமரர் செம்பியன் செல்வன் ஞாபகர்த்தப் போட்டி பரிசுக்கதை 'சீண்டச் சீண்டத் தொடரும்'.

பூபாளராகங்கள் 2007 பரிசுக்கதை 'மரணங்கள் நடுவே ஜனனம்'.

பூபாளராகங்கள் 2008 பரிசுக்கதை 'குடை பிடிக்கும் நினைவுகள்'.





**எவ்வகையான புத்தகங்களை அல்லது யாருடைய புத்தகங்களை அதிகமாக வாசிக்கிறீர்கள்? ஏன்?**

கையில் கிடைக்கும் எல்லா வகையான புத்தகங்களையும் வாசிப்பது வழக்கம். இருந்தும் எனது துறை சிறுகதை என்பதால் சிறுகதைகளைத் தேடி வாசிப்பேன். பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களை அதிகம் வாசிப்பேன். ஈழத்து எழுத்தாளர்களில் அன்னலட்சுமி ராஜதுரை தொடக்கம் தாமரைச்செல்வி, கோகிலா மகேந்திரன், தாட்சாயிணி என்பவர்களுடன் இன்றைய இளம் எழுத்தாளர்கள் வரை இப்பட்டியல் நீளும். தமிழ் நாட்டு எழுத்தாளர்களில் சிவசங்கரி, வாசந்தி, அனுராதா ரமணன் இவர்களுடைய கதைகளை அதிகம் வாசிப்பேன். பெண் எழுத்தாளர்களின் பார்வைகள், ஆண் எழுத்தாளர்களில் நின்றும் பல விடயங்களில் வேறுபடுகின்றன. குறிப்பாக ஒரு குடும்பத்தில் நிகழும் சிறு சம்பவங்களைக் கருவாக்கி கதை சொல்வதில் இவர்கள் ஆண் எழுத்தாளர்களை விட ஒரு படி மேல்.

**வளர்ந்து வரும் சிறுகதை எழுத்தாளர்களுக்கு தாங்கள் கூற விரும்புவது என்ன?**

'வளர்ந்து வரும் எழுத்தாளர்கள்' என்று இவர்களைக் குறைத்து மதிப்பிட முடியாது. சிறு துணுக்குகளைக் கூட கதையாக்கி விடும் ஆற்றல் இவர்களுக்கு உண்டு. இதற்கு இவர்கள் எழுதும் பல கதைகள் சாட்சி. ஒரு கட்டுக்குள்ளும் சிக்காமல் எழுதும் இவர்களை கரு, சம்பவம், மொழியாட்சி... என்று பயமுறுத்த விரும்பவில்லை. ஒன்று சொல்லலாம். இப்போது தான் 'இன்டர்நெட்' இருக்கிறதே. ஒன்றைப்பற்றி இதுவரை தெரியாத பல தகவல்களைப் பெறலாம். இதிலிருந்து பல தரமான படைப்புக்கள் தர முடியும். நூல் நிலையத்தில் புத்தகங்களை தேடிப்புரட்டும் சிக்கல் இன்றில்லை. சிறிய வசனங்களில் கதையை நகர்த்துவது, கதைக்கு வேகத்தையும், சுவாரசியத்தையும் தரும். குறிப்பாக வாசகனுக்கு தலையிடியைத் தராது.

## முறை தவறி...!



இனிய கவிகள் படைத்தாய்
இவள் இதயத்தில்
சகோதரனாய்
இடம் பிடித்தாய் – பிறகு
இங்கிதம் உள்ளவனாய்
நடித்தாய்
இரட்டை வேடத்தால்
மனம் உடைத்தாய்!

ஆரம்பத்தில்
விடை தேடும்
வினாக்களாய் இருந்து...
காலப்போக்கில்
விடியலின் ராகமாய்
கவி கூறினாய்...
காலம் கனிந்து
வந்த பிறகு...
அரக்கனாய் நீ
மாறினாய்!

''நண்பா எழுது வெண்பா''
என்றாய்...
பெண்பா வம் பொல்லாதது
அறிவாயா அதை நீ?
கண்பா ர்வைக்கு விளங்காதது
புரிவாயா அதையும் நீ?

ஈரைந்து ஆயிரங்கள்
கடன் கேட்டாய்...
இந்தியா போக வேண்டும்
என்றாய்...
இசை இளவரசனாய்
ஆன பின்பு
கடன் தந்தோரின்
மனசைக் கொன்றாய்!

வருடங்கள் இரண்டு
கடந்த பின்னும்
வாயை நானும் திறக்கவில்லை..
கடனைக் கேட்டு அடம் பிடித்து
நட்பை நானும்
துறக்கவில்லை!

கொடுத்த கடனைக்
கேட்டதற்காய்,
கெட்டவள் பட்டம் சூட்டுகிறாய்!
இப்போதைக்கு
கடனைத் தரவே மாட்டேன்
என்று
புத்தியை நீயும் காட்டுகின்றாய்!

சகோதரிகள் அற்று நீ
பிறந்ததால் எம் கவலைகள்
விளங்காது...
இன்றைக்கு மூன்று
வருடங்களாகிறது...
இனிமேலும்
கடனை தா
கூடிய சீக்கிரம் சுணங்காது!

**வெலிகம**
**ரிம்ஸா முஹம்மத்**





## மனிதன் மனிதனாக!

பாலாய் ஊறும்
பவித்திரங்களுக்குள்
வேல் பாய்ச்சிடும்
வித்தகங்களின் வியாபகம்!
நூலாய் போனாலும் -
ஆழியாய் பரந்து
நிலவெரிக்கும் வானாய்
நிலத்திலென் சால்புகள்!

மனிதத்தை ஏந்தி நிற்கும்
புனிதத்துடன்
புழுதியிலே மனிதன்
நடக்கிறான்...
கண்கள் விடுக்கும்
கருணை அழைப்பில்
இன்னல்களை
இதயம் சுமக்கிறான்!

சுற்றி வரும் பாவங்களை
சுத்திகரிக்கும்
உள்மன உச்சாடனங்கள்...
வற்றிப்போகும்

வாய்மை வார்த்தைகளும்
நற்களமமைத்து
நல்லோசை நல்கும்!

எல்லையில்லா
இதயவெளியொன்றில் சுவாசம்...
அமாவாசை
ஆத்மாக்களின் ஔடதம்
தள்ளி நிற்கும்
உயிர்ப்பின் இசையை
அள்ளியணைக்கும்
அன்பாலயம்!

காலில் விழும்
இல்லாமை முடிச்சுகளை
கல்லாய் மாற்றி
சொல்லால் துளைக்காமல்
வெல்லமாய் மொழிந்து
விருப்பமாய்
இருக்கை தரும்
சூத்திரங்கள் எமக்குள்ளே
என்றும்!!!

**பாஹிரா- பதுளை**

## வாசகர் கவனத்திற்கு

சந்தாதாரராக இணைந்து கொள்ளுங்கள். அது பூங்காவனம் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதையும், கிடைப்பதையும் உறுதி செய்யும். சந்தாதாரராக இணைந்து கொள்பவர்கள் ஆகக் குறைந்தது 500/= வை சந்தாவாக செலுத்தவும். பக்கச்சார்பற்ற முறையில் எழுதப்பட்ட, இதுவரை பிரசுரமாகாத ஆக்கங்களையே பூங்காவனம் எதிர்பார்க்கிறது. பூங்காவனம் இதழில் விளம்பரங்களைப் பிரசுரிக்க மற்றும் கொடுப்பனவுகள், சந்தா, விற்பனை முகவர்களின் தொடர்புகள் ஆகியவற்றுக்கு 077 5009 222 என்ற தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்!

*- நிர்வாகக்குழு -*

## உள்ளத்திற்கு மருந்து

ஓ
இதயமே...
நிராகரிப்புகளுக்காய்
கலங்குகிறாயா?
வேண்டாம் விடு...!
ஏக அங்கீகாரம்
போதும் உனக்கு!

ஓ
உள்ளமே..
ஆதரவுகளின்
அலட்சியங்களுக்காக
அழுகிறாயா?
வேண்டாம்..
அருளாளன் அன்பு
போதும் உனக்கு!

ஓ
நெஞ்சமே...
பாசங்கள் யாவும்
வேஷங்களான விஷங்களான
வேதனைகளைத் தருவதால்
புண்ணாகிப் போனாயோ?

வேதனையை விடு
உன் - ஏக நேசனே
உனக்கு அருமருந்து தான்!!!

**ஏ.சீ. ஜரீனா முஸ்தபா**
**வெலிவிட்ட**

## கால் மணி நேரக் கனவு!

நிலா கருத்தரித்த ராத்திரி வானத்தில்
கொக்கை கட்டி
நட்சத்திரப் பழங்களை ஆய்ந்து
கொண்டிருந்தேன்...

தீக்குச்சி உரசாமல்
வெந்து போன மூங்கில் காடுகளில்
நான் மாத்திரம்
உலாவ எண்ணிய போது
அருவிகள் இடைமறித்து
சஹாராவாய் காய்ந்து போன
என் நாவுக்கு குடிநீர் பிரகடனம்
செய்யலாமா...?

சோமாலியாச் சிறுவனாட்டம்
அருந்தினேன் அருவியை..

ஒரு விடியற்காலை
நிர்வாணம் களைந்து
என்னோடு சேட்டை செய்தான்
அல்லியின் காதலன்...

தணல் மேடுகள்
காட்டு நாணல்களை நலம் விசாரிக்க..
விழிகளுக்கு விலங்கம் செய்து
சிவப்புச் சூரியன்களை
விதைத்துச் சென்ற வேளை
விடிந்ததாய்
உம்மாவின் அதட்டல் கேட்டு என்
கால்மணி நேரக் கனவு
கலைந்து போனதுவே!!!

**. எஸ். ஜனூஸ் -**
**சாய்ந்தமருது**





## கவலையில்லை கண்மணி!



பாவை உன் முகம் காண~ இந்த
பாவிக்கு மட்டும்
ஆசையில்லையா?

காலமும் நேரமும்
கைகோர்த்துக் கொண்டு எனை
வதைக்கிறது...
வஞ்சி உந்தன் நெஞ்சம்
ஏன் இதை
புரிய மறுக்கிறது?

நான் என்ன
வாய்ப்புகளை
வைத்துக் கொண்டா
வஞ்சகம் செய்கிறேன்?

இல்லையடி
அந்த
வாய்ப்புக்காக
தவமிருக்கிறேன்..

என் வார்த்தையின் மீது
உனக்கில்லாத நம்பிக்கை
காலத்தின் மீது
எனக்கு இருக்கிறது!

அதனாலோ என்னவோ
கவலைகள்
என்னை விட்டு
தூரவே நிற்கிறது!!!

**வி. விஜயகாந்த்**
**பலாங்கொடை**

---

## "பூங்காவனம்" கிடைக்குமிடங்கள்

பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 11
பூபாலசிங்கம் புத்தகசாலை கொழும்பு - 06
கொர்டோவா புத்தகசாலை கொழும்பு - 06
இஸ்லாமிக் புக் ஹவுஸ் கொழும்பு - 09
பெஸ்ட் குயின் பவுண்டேஷன் - கல்கிசை



சிறுகதை

# லண்டன் அகதி

இளைய அப்துல்லாஹ்

லண்டனில் எரிக்கும் வெயில்தான் வெள்ளைக்காரருக்கு பிடிக்கும். ஆனால் எனக்கு குளிர்தான் பிடிக்கும். காரணம் பல. பகலில் அந்த வெக்கையில் கட்டிலில் படுக்க முடியாது வியர்த்து ஒழுகும். இரவில் யன்னலைத் திறந்தாலும் அவியும். கட்டில் சூடு 'கிளைமேட்' எல்லாம் சேர்ந்து வேகும். நித்திரை வராது. சிலர் வேர்வை ஒழுக ஒழுக படுப்பார்கள். என்னால் முடியாது.

இப்பொழுது குளிர்காலம். எல்லோரும் குளிர் உடுப்புக்கு மாறி விட்டார்கள்.

ஹவுன்ஸ்லோவில் இருந்து எமது வீட்டுக்கு போகும் பாதைக்கு செல்ல கொஞ்சம் வேகமாக நடந்தால் பத்து நிமிடம் நடக்க வேண்டும். நடந்து தான் போகிறேன். குளிர் முகத்தில் அறைகிறது. மழை தூறப்போகிறது.

வெள்ளைக்காரர் சொல்லுவினம் வைபையும், வெதரையும் நம்ப முடியாது எண்டு.

மழை மாதிரி இருக்கும், வெயில் வரும். வெயில் மாதிரி இருக்கும், மழை வந்துவிடும்.

மனம் முழுக்க மிகவும் புழுக்கமாக இருக்கிறது. ஸ்ரெயின்ஸ் றோட்டில் ஒரு ரெட்டைத் தட்டு பஸ் போகிறது. முன் சீற்றில் இருக்கும் ஒரு பிள்ளை மேல் தட்டு பஸ்ஸை தான் ஓட்டுகிறதாக பாவனை செய்கிறது. டிக்ஸனுக்கும் அஸ்டாவுக்கும் பக்கத்தில் உள்ள முடுக்கில் ஒரு 'ஹோம்லெஸ்' பிச்சை கேட்கிறார்.





அவரை பொதுவாக ஆட்கள் கவனிக்காமல் போகிறார்கள். அவர் ஹோம்லெஸ் ஆனதற்கு அவர்தான் காரணம் என்று போவோர் வருவோர் நினைக்கிறார்கள். அவர் உசாராக வேலை செய்திருந்தால் அவர் வயதான காலத்தில் நாயோடு ஏன் பிச்சை கேட்க வேண்டும். அரசாங்கம் அவருக்கு காசு கொடுக்குமே என்பதே மக்களின் மனங்களில் உள்ள கேள்வி.

பொதுவாகவே மணித்தியாலம் மணித்தியாலமாய் உழைத்து சேர்க்கும் ஒவ்வொரு பவுண்ஸ்களுமே மிகவும் பெறுமதி வாய்ந்தவை. அதனை வேறு யாருக்கும் இனாமாக கொடுக்க வெள்ளைக்காரர் தயாராக இல்லை. உடலுழைப்பு இல்லாமல் இங்கு ஒரு பென்ஸ் கூட கிடைக்காது. வாழ்வு இங்கே வித்தியாசமானது.

ஒரு ஃபோன் லொக் உடைக்கும் கடையின் முன்பு சிறுவர்கள் கூடி நின்றார்கள்.

லண்டனில் எல்லோர் கையிலும் போன் இருக்கிறது. எஸ்.எம்.எஸ். அனுப்புவது மலிவு. ஸ்கூல் பிள்ளைகள் எல்லாரும் ஃபோன் வைத்திருக்கினம்.

எனது ஃபோன் எனது கையில் இருக்கிறது. 30 பவுண்ஸ்க்கு சண்டே மார்க்கட்டில் வாங்கியது.

அதுதான் லண்டனில் உள்ள மிகக் குறைந்த விலையுள்ள போன் ஆக இருக்கும். ஏதும் அந்தரம் ஆபத்துக்கு ஒரு போன் வேண்டுமென்று ரூமில் உள்ளவர்கள் சொல்ல வாங்கியது. 30 பவுணை இலங்கை காசுக்கு கூட்டிப்பார்த்தால் ஆறாயிரம் ரூபா. ஆறாயிரம் ரூபாவுக்கு இலங்கையில் ஒரு புதுப் ஃபோன் வாங்கலாம் என்று நண்பர்கள் சொன்னார்கள்.

லண்டனில் ஃபோன் பாவிப்பதும் செலவுதான். போன ஆரம்பத்தில் எல்லா பவுண்ஸ்களுக்கும் ரூபாயை கணக்குப் பார்த்து பழகி விட்டது.

ஒரு கோப்பி 200 ரூபாய். முடிவெட்ட குறைந்தது 2000 ரூபாய். ஒரு நேரம் டேக்எவே சாப்பாடு 800 ரூபாய் என்று. ஆனால் பெற்றோல்

ஸ்டேஸனில் வேலைக்குப் போனாப் பிறகு கொஞ்சம் மாறிவிட்டது எல்லாம். இரவு வேலை. ஏனெனில் ஆசைப்பட்டது எல்லாம் அனேகமாக தின்னலாம். லண்டனில் உள்ள அனேகமான சொக்கலேட் வகைகள் குளிர்பானங்கள் என்று பெற்றோல் ஸ்டேஸனில் இருக்கும். மனேஜர் சாப்பிடுவதற்கு, குடிப்பதற்கு ஒன்றும் சொல்ல மாட்டார். நல்ல மனிதர். தேவன் அண்ணை அவர்தான் மனேஜர்.

♦♦♦♦

அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்ட செய்தியோடு சுரேஷ் வந்தான். பிரித்தானிய இமிக்கிரேஷன் என்ன நினைக்கிறது என்பது யாருக்கும் தெரியாது. அவர்கள் ஏன் நிராகரிக்கிறார்கள். ஏன் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது மறை பொருளாகவே இருக்கிறது.

உண்மையில் இலங்கையில் ஆபத்து உள்ளவர், உயிருக்கு அச்சமுள்ளவர், வாழ முடியாதவர், இயக்கங்களாலும் ஆமியாலும் சுடப்பட்டு விடுபவர் என்று இருப்பவர்கள் பல பேர். ஆதாரங்களை காட்டினாலும் நிராகரித்து விடுவார்கள்.

சிலருக்கு ஒன்றுமே இருக்காது. வழக்குக்கு முறைப்பாடு அழகாக சோடிக்கப்பட்டதாக இருக்கும். ஆனால் பிரித்தானிய நீதவானுக்கு அது பிடித்திருக்கும். எல்லாத்தையும் தோண்டிப் பார்க்க முடியாது தானே.

சுரேஷ் பியர் குடிக்க வேண்டும் என்று கேட்டான். நான் வேலை செய்கிறேன். சுரேஷும் பெற்றோல் ஸ்ரேஸன் ஒன்றில் ஏழு வருஷமாக வேலை செய்கிறான். அவன் லண்டன் வந்த காசை, உழைத்து கட்டிவிட்டான். அவனுக்கு பொறுப்புகள் அதிகம்.

முதலில் பல நண்பர்களோடு நானும் சுரேஷும் ஒன்றாக இருந்து விட்டு பின்னர் நாங்கள் மட்டும் தனி ரூமுக்கு வந்து விட்டோம். கரைச்சல் இல்லாதவன். இன்றைக்கும் கவலையாக இருக்கிறான். நாங்கள் ஹொட்றிங்ஸ் எடுக்கிறதில்லை. பியர் தான் அதுவும் ஒரே இல்லை.





பனி ஊசியாக குத்துகிறது. பனி பொழிகிறது. கட்டிகட்டியாய் விழுகிறது. நாளைக்கு வேலை லீவு. எனவே இன்று சந்தோஷம். இன்று பியர் குடிக்கலாம். நல்லா நித்திரை கொள்ளலாம். ஒரு படம் பார்க்கலாம்.

எதுக்கும் மூட் இல்லை. சுரேஷுக்கு பியர் குடிப்பதை தவிர.

அகதி அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்டால் இனி கையெழுத்திடப் போக வேண்டும். கையெழுத்து வைப்பது என்பது ஒரு பேரவலம் லண்டனில்.

சிலருக்கு மாதத்துக்கு ஒருமுறை, சிலருக்கு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை, சிலருக்கு கிழமைக்கு ஒரு முறை, சிலருக்கு தினமும்.

இந்த கையெழுத்து வைக்கும் வேலை என்பது அகதிகளை பாடாய்படுத்தும் பயக்கடுதியான வேலை.

கையெழுத்து வைக்கப் போன இடத்தில் எத்தனையோ பேரை தூக்கி சிலோனுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதுதான் நெஞ்சிடி. எப்போ திருப்பி அனுப்புவதற்கு பிடித்து வைக்கப்போகிறார்கள் என்பதே தெரியாமல் கையெழுத்து வைக்கும் இடத்துக்கு போவதே ஒருவகை மன அழுத்தத்தை ஏற்படுத்தி விடும். ஒரே ட்ரென்ஸன் ஆன வேலை அது. நெஞ்சம் படபடத்துக் கொண்டே இருக்கும் எல்லோருக்கும். கையெழுத்து வைக்கப் போனால் அந்த ஒ.்.பிஸ் கவுண்டரில் அனேகமாக குஜராத்தி, பஞ்சாபிகள் தான் வேலை பார்க்கிறார்கள்.

அவர்கள் ஏதோ எமது தலைவிதியை தாமே தீர்மானிப்பவர்கள் போல நடந்து கொள்வார்கள். அவர்களின் வழித் தோன்றல்கள் எல்லாம் எமது நாட்டுக்கு பக்கத்தில் உள்ளவர்கள் என்றோ நாமும் இரக்கப்பட வேண்டியவர் என்றோ நடந்து கொள்ள மாட்டார்கள்.

முழு பிரித்தானிய இமிக்கிரேஷனும் அவர்கள் கையில் இருப்பது போலவே இருப்பார்கள். அவர்களின் கெடுபிடி தாங்க முடியாது. அவ்வளவு அட்டகாசம்.

ஹவுன்ஸ்லோவுக்கு அண்மையில் இருக்கும் கையெழுத்திடும் இடம் ஸ்ரெயின்ஸ் றோட்டில் இருக்கிறது. ஹவுண்ஸ்லோவில் இருந்து ஒரு பவுண் 20 பென்ஸ் பஸ் தூரம். வெகு தொலைவில் கிழமைக்கு ஒரு தரம் வருபவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் மிகவும் சிரமப்படுவார்கள்.

அகதிகள் சிலருக்கு ஒருமுறை கையெழுத்திடப் போகாவிட்டாலும் வேலை அனுமதியை ரத்து செய்து விடுவார்கள். கவுண்டரில் இருக்கும் ஒரு ஒ.்.பிஸருக்கு வேலை அனுமதியை ரத்து செய்யும் அதிகாரம் இருக்கிறது. இது பெரிய அநியாயமாகும்.

ஏனெனில் அரச உதவியும் இல்லாமல் வேலையும் செய்ய முடியாமல் இருப்பது பைத்தியக்காரத்தனத்தை கொண்டு வந்துவிடும். லண்டனில் அகதிகளுக்கான கொடுமை இது.

நேரம் மாலை ஆறு மணி. குளிர்காலத்தில் நாலு மணிக்கே இருண்டுவிடும் லண்டன். குளிர் உடலை குத்துகிறது. எப்படியாவது வெளியில் போக வேண்டும். மழை தூறிக் கொண்டிருந்தது. திடீரென்று அது நின்றுவிட்டது. இப்பொழுது சின்னச் சின்ன பஞ்சுத் துண்டுகள் போல பனி பொழிகிறது. றோட்டில் கார்களின் மேல் பனிப் பஞ்சுகள் விழுந்து கொண்டிருக்கின்றன. வர வர கூடும் போல இருக்கிறது.

பக்கத்து வீட்டு பெஞ்சமின் தனது நாயைக் கூட்டிக்கொண்டு தனது வீட்டுக்கு வருகிறா. பிரான்சில் மூன்று நாய் கடித்து ஒரு நாய் வளர்த்த மனிசி செத்த கதையை பெஞ்சமினுக்கு நேற்றுத்தான் சொன்னேன்.

தனது நாய் அப்படி செய்யாதென்றும், அது குட்டியிலேயே தன்னோடு வந்து விட்டதாகவும் ஒரு கன்றுக்குட்டி அளவுக்கு வளர்ந்து விட்டதால் அதன் குணம் மாறாது என்றும் சொன்னா.

இருந்தும் கடிக்கும் வாக்கு இருப்பதாகவும் அதன் வாய்க்கு சாப்பிடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் பூட்டு போட்டு வைத்திருக்கும் படியும் சொன்னேன்.





அவ அதில் உடன்படவில்லை. தன்னை அது கொஞ்சவும், கொட்டாவி விடவும், மெதுவாக அது குலைக்கவும், தனது கால்களை செல்லமாக கடிக்கவும், பூட்டு போட்டால் அது என்ன செய்யும் என்றும், அதன் சுதந்திரம் இல்லாமல் போய்விடும் என்றும் சொன்னா.

சுதந்திரத்தை விடவும் உங்களின் முகம், உயிர் முக்கியம் என்பதனை பிரான்ஸ் நாய்கள் எசமானியின் முகத்தையே முதலில் கடித்ததை சொன்னேன்.

நாய் விடயமாக வெகு ஆழமாக நான் சொன்னது பெஞ்சமினின் அடி மனதில் பதிந்து போய் இருக்கிறது. என்னைக் காணும் போதெல்லாம் பெஞ்சமின் இப்பொழுது தன் மீது அக்கறை கொண்ட ஒருவரைப் பார்த்து சிரிக்கும் சிரிப்பை சிரிக்கிறா. முந்தியென்றால் அப்படி இல்லை. நாய் என்னைப் பார்ப்பது முறைப்பது போல இருக்கிறது.

சுரேஷ் கவலை தோய்ந்த முகத்தோடு ஜக்கட்டை போட்டுக் கொண்டு வந்தான். அவனது ஜக்கட் எப்பொழுதும் புகை மணம் உடையதாக இருக்கும். ட்றை கிளினுக்கு போட்டு எடடா என்றாலும் கேட்க மாட்டான். அந்த மணம் அவனுக்கு பழகிவிட்டது. எனக்கு பிடிக்காதது.

பஞ்சாபியின் கடை திறந்திருக்கிறது. லண்டனில் பஞ்சாபிகள், குஜராத்திகள், இலங்கையர், பாகிஸ்தானியர், பங்களாதேஷிகள் என்று கூட்டம் கூட்டமாக வாழுகிறார்கள். இது அவர்களுக்கு ஒரு சமூக பாதுகாப்பை கொடுக்கிறது.

சுரேஷ் மூஞ்சைத் தொங்கப் போட்டுக் கொண்டே பாதையில் வருகிறான். 'மல்பறோ' லைட் ஒன்றை வாங்கி பத்த வைத்தேன். குளிருக்கு இதமாக இருந்தது.

லண்டன் வருகிறோம் என்று விட்டு ஹரோ, ஹவுன்ஸ்லோ ஈஸ்ட்ஹம், அல்பேட்டன் பக்கம் போய் பார்க்கும் முதலாவதாக போகிறவர்கள் லண்டன் ஊத்தையாய் இருக்கிறது என்று சொல்வார்கள். வீதியில் குப்பை இருக்கும். பஞ்சாபிகளும், இலங்கையரும், குஜராத்திகளும் தமது குப்பைகளை பக்குவமாக குப்பைத் தொட்டியில் போடுகிறவர்கள் குறைவு. அதுதான் ஹவுன்ஸ்லோ கவுன்ஸில் குப்பையை றோட்டில்

போட்டால் 50 பவுண்ஸ் தண்டம் கட்ட வேண்டும் என்ற சட்டத்தை, போன ஜனவரியில் இருந்து கொண்டு வந்திருக்கிறது.

சுரேஷ் திருப்பி அனுப்பி விடுவார்களோ என்ற கவலையில் இருந்தான். இப்ப இருக்கும் சூழ் நிலையில் திருப்பி அனுப்ப மாட்டார்கள் என்று யோசித்துப்பார்த்து விட்டுச் சொன்னான். மாவீரர் உரைக்கு பிறகும், பித்தளைச் சந்தி குண்டு வெடிப்புக்கு பிறகும் அகதிகளுக்கு ஒரு தைரியம் வந்திருக்கிறது. திருப்பி நாட்டுக்கு அனுப்பமாட்டார்கள் என்பது தான் அது.

லண்டனில் காசு சேர்க்கிறவையிட்டையும் எங்கை தம்பி அடிபாடுகளை காணவில்லை என்று தான் எல்லோரும் கேட்டு ஐம்பது பவுணோ நூறு பவுணோ கொடுக்கிறது வழக்கமாகவே இருந்தது. இருக்கிறது.

அகதிகள் ஐரோப்பிய நாடுகளில் கரைச்சல் இல்லாமல் இருக்க வேணுமெண்டால் ஈழத்தில் அடிபாடு இருக்க வேண்டுமென்டுதான் அகதிகள் எப்போதும் நினைக்கினம். அது உண்மையானதும் கூட.

'கய்ஸாஹே?' - (எப்படி இருக்கிறாய்?) 'டீக் கூன்' (நல்லாய் இருக்கிறேன்) பஞ்சாபி, ஹிந்தியில் என்னிடம் விசாரித்தான்.

'நாய், பூனை போன்ற பிராணிகளுடன் கடைக்குள் வரவேண்டாம்' என்று பஞ்சாபி போட் போட்டிருக்கிறார். உவர் என்ன இரக்கமில்லாதவர் போல என்று சில வெள்ளைக்காரர் முகம் சுளிப்பதுண்டு. ஆனால் பாணில், வேறு உணவுப் பொருட்களில் மிருக சாதிகள் வாயை வைத்து விட்டால் வாற மனிசரும் வரமாட்டார்கள்.

'கோமதை மச்சாங்' திரும்பியபோது ஜயலத் நின்று கொண்டிருந்தான்.

ஜெயலத்துக்கும் ஒரு மாதம் முதல் தான் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டிருந்தது. ஹவுன்ஸ்லோவில் இருக்கிறான். நன்றாக தமிழ் பேசுவான். ஒரு சன்விச் கொம்பனியில் பாணுக்கு உள் சாமான்கள் வைக்கும் வேலையில் இருக்கிறான். கொழும்பில் ஹுனுப்பிட்டியில் இருக்கிறான். எங்களோடு நல்ல சினேகிதம்.





ஜெயலத் ஆமியில் இருந்ததாகவும், புலிகளின் ஏரியாவில் வேலை செய்து ஓடி வந்ததாகவும், அதனால் தனக்கு உயிர் அச்சம் இருப்பதாகவும் அகதி கேஸ் செய்திருந்தான்.

ஆனால் இமிக்கிரேஷன் காரருக்கு இப்ப இலங்கை அத்துப்படி. சிங்களவன் உனக்கு ஹுனுப்பிட்டியில் இல்லாவிடில் வேறு எங்காவது வாழலாம் என்று கேஸை றிஜக்ட் பண்ணிவிட்டார்கள். ஜெயலத் ஊருக்கு போக எமர்ஜன்ஸி பாஸ் போட்டுக்கு விண்ணப்பித்து இருக்கிறான்.

சுரேஷ் பன்னிரண்டு ஸ்ரெல்லாவை எடுத்து சொப்பிங் பையில் போட்டு கொடுக்க பஞ்சாபி எண்ணிப் பார்த்து காசை வாங்கினார்.
'கல் மிலேன்கே' (நாளை சந்திப்போம்). கடையை விட்டு வெளியில் வரும் போதும் சுரேஷ் தலையை கவிழ்ந்தபடியே வந்தான் சோகமாகவே.

ஜெயலத்தையும் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு போனோம். கடையில் வாங்கிய கபாப் இருந்தது. அதனை மைக்ரோவேவில் வைத்து சூடாக்கி எடுத்தான் ஜெயலத். ஜெயலத் அடிக்கடி வீட்டுக்கு வருவான்.

ஹீற்றரை கொஞ்சம் கூட்டி வைத்துக் கொண்டு ஜன்னல் சீலையை விலத்தினால் வெளியில் முழுக்க பனி பொழிகிறது. கண்ணாடி முழுக்க ஈரம். ஹற்றர் இதமாக இருந்தது.

குளிருக்கு பியர் இதமாக இருந்தது. ஒரு ஸ்ரெல்லா இறங்கிய பின்னர்தான் சுரேஷ் சாதாரண நிலைமைக்கு வந்தான்.

''கேஸை அப்பீல் பண்ணலாமா?''
''ஏற்கனவே உறுதி இல்லாமல் போயிட்டுது''
''அப்ப என்னடா செய்றது?''
''ஊரிலையும் இருக்கேலாது இங்கையும் இருக்கேலாட்டி என்ன செய்யுறது? களவாய் எத்தனை காலத்துக்கு ஒழிச்சுக் கொண்டு இருக்கிறது?''.

அகதிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மனநிலையில் இருக்கின்றனர். ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு கவலைகள், கேள்விகள், வாழ்வின் எதிர்பார்ப்புகள், இயலாமைகள் இருக்கும்.

இமிக்கிறெஷன் காரர்களும் நிராகரிப்பு என்ற ஒரு லெட்டரோடு எல்லாத்தையும் முடித்து விடுவார்கள். வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராடிக்கொண்டிருப்பார்கள் அகதிகள்.

♦ ♦ ♦ ♦

வெளியில் பொலிஸ் சைரன் கேட்டது. ஜன்னல் சீலையை விலக்கிப் பார்த்தேன். மூன்று கார்களும் இரண்டு வானும் நிறைய பொலிஸ்காரர்கள். நேராக சாந்தன் வீட்டுக்கு போய் கதவைத் தட்டுகிறார்கள். அப்பொழுதுதான் சாந்தன் வந்திருந்தான். போன கிழமைதான் ஒரு பி.எம்.டபிள்யூ கார் வாங்கியிருந்தான் சாந்தனுக்கு பத்தொன்பது வயதுதான்.

கிறடிட் காட் செய்கிறவன் சாந்தன் என்று எல்லோருக்கும் தெரியும். அதனை ஒரு பிஸ்னஸ் போல செய்கிறான். அவனிடம் மெசினும் இருக்கிறது கிறடிட் காட் செய்ய. அது ஒரு கையடக்கமான சாமான். லப்டொப்பில் எல்லாமே செய்யலாம். பொலிஸ் கன காலமாக முகர்ந்து முகர்ந்து பிடித்துவிட்டது. சாந்தனின் வீட்டை சுற்றி மஞ்சள் நாடாவை கட்டி விட்டார்கள். பெரிய வீடு முழுவீட்டையும் சோதிக்க ஆறு நாய்கள் சகிதம் வந்து இறங்கிவிட்டனர். ஆண், பெண் மெற்றோ பொலிற்றன் பொலிஸார்.

கள்ள கிறடிட் காட் செய்து பெரிய பணக்காரர்களின் வங்கி கணக்குகளில் இருந்து பணத்தை ஏ.ரி.எம். மெசின் மூலமாக உருவுவது. டிக்ஸன், ஆர்கோஸ் போன்ற இடங்களில் பெரிய பெரிய எலக்ரோனிக் சாமான் வாங்கி விற்பது, கொலை, கொள்ளை என்று கிறிமினல் வேலை செய்வதனால் தான் இலங்கையில் உண்மையான கொலை மிரட்டல் உள்ளவர்களையும், இங்கிலாந்தும் ஏனைய நாடுகளும் அகதிகளாக உள்ளே எடுக்கிறார்களில்லை. பயம் வந்தவன் இங்கு கிறிமினல் ஆகிவிடுகிறான். சட்டத்தில் உள்ள மனிதருக்கான உரிமையை துஷ்பிரயோகம் செய்கிறான்கள்.

சோதனை நடக்கிறது எல்லா நாய்களும் சாந்தனின் வீட்டுக்குள் முகர்ந்து முகர்ந்து திரிகின்றன. கொம்பியூட்டர், கிரடிட் காட்டுகள் எடுத்துவிட்டார்கள். மெசின், குடு, கள்ளமாக வாங்கிய பொருட்கள்





எல்லாவற்றையும் பொலித்தினில் சுற்றுகிறார்கள். நாய்கள் ஆறும் தொடர்ந்து முகர்ந்து முகர்ந்து கொண்டே வீடு முழுக்க பரபரப்பாக ஓடி ஓடி வருகின்றன. நாய்கள் மூசும் சத்தம் இங்கு கேட்கிறது.

தெருவே பரபரப்பாகிவிட்டது. அக்கம் பக்கம் இருந்த வீட்டுக்காரர்கள் எல்லோரும் இப்பொழுது சாந்தனின் வீட்டுக்கு முன்னால் கூடி விட்டார்கள். நாங்கள் முதலே போய்விட்டோம்.

''புளடி கிரிமினல்ஸ்'' என்று ஒரு வெள்ளை ஏசுகிறது.
''.:.பக்கிங் ரமிள்ஸ்'' என்று இன்னொன்று சொல்கிறது. இப்படியே எமது இனத்தையும், சாதியையும் சொல்லி ஏசுகிறார்கள்.

சாந்தனுக்கு விலங்கு போட்டாச்சு. சாந்தனின் இரண்டு கூட்டாளிகளையும் ஆம்பிளை பொலிஸார் வீட்டுக்கு வெளியே அழைத்து வருகின்றனர். சாந்தனின் மனைவியையும், தங்கச்சியையும், குழந்தையையும் பெண் பொலிஸார் அழைத்து வருகின்றனர். வீட்டுக்கு பின்னால் உள்ள கதவு, சைற் கதவு எல்லாவற்றையும் பொலிஸ் சீல் வைக்கிறது. முன் கதவையும் சீல் வைத்து மூடிவிட்டு காருக்கும் ரயருக்கு லொக் போட்டு மூடி விட்டார்கள்.

எல்லா தெருவாசிகளும் திட்டுகிறார்கள். இந்த அகதிகளால் எங்களுக்கும் நிம்மதியில்லை. எங்களுடைய நாட்டை கொள்ளையடிக்க வந்த மூதேசிகள். இவன்களை எல்லாம் நாட்டை விட்டு முதலில் துரத்த வேண்டும். எவனுக்குமே நாட்டுக்குள் வர விடக்கூடாது. எவனுக்குமே இரக்கம் காட்டக் கூடாது. எங்களின் இரக்க குணத்தை இவன்கள் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். எங்கடை நிம்மதியையும் இவன்கள் பறிக்கிறான்கள். இந்த முறை தேர்தலிலை இவன்களை பற்றி கட்சிகளிடம் சொல்ல வேண்டும். இவன்களை எந்த அகதியாக இருந்தாலும் உள்ளே எடுக்காத கட்சிக்குத் தான் எங்கடை வாக்கு.

எல்லா பத்திரிகைகளிலும் இவன்களைப் பற்றி எழுத வேண்டும். எல்லா ரீ.விக்களிலும் இவன்களைப் பற்றி டொக்கியூமன்றி போட வேண்டும். கிரிமினல்ஸ் எங்கட பணத்தை எங்கட நாட்டில் இருந்து கொண்டே கொள்ளையடிக்கிறான்கள்.

எல்லோரும் ஆத்திரப்படுகிறார்கள். சாந்தனையும் குடும்பத்தையும் மற்றவர்களையும் பொலிஸ் வானில் ஏற்றும் பொழுது ஊரே வெறுப்பாய் பார்த்துக் கொண்டு நிற்கிறது. அவன் இருந்த அந்தத் தெருவில் தாங்கள் இருந்தோமென்ற வெறுப்பு வெள்ளைக்காரருக்கு இருந்தது தெரிந்தது.

வானில் ஏறிப் போக முதல் பொலிஸ் நாயொன்று எமது வீட்டையும் அண்ணார்ந்து பார்த்தது. நாங்களும் சிலோன் காரர் என்று மோப்பம் பிடித்து விட்டதாக்கும் என்று ஜெயலத் சொன்னான்.

எல்லோரும் ஒவ்வொரு கதையாக கதைத்துக் கொண்டு வீட்டுக்குள் போகிறார்கள். எங்களையும் பார்த்து ஒருவகை வெறுப்பாக முகத்தை சுளிக்கிறார்கள். பெஞ்சமின் மட்டும் எங்களோடு வந்து கதைக்கிறா. எல்லா சிலோன் காரரும் அப்படி இல்லைத்தானே. சந்தன் (பெஞ்சமின் சாந்தனை சந்தன் என்றுதான் சொல்லுவா) எப்பொழுதும் கிறிமினல் வேலைத்தான் செய்வான். அவனை இந்த வீட்டுக்கு வந்ததில் இருந்து அவதானிக்கிறேன். உவன் உப்படித்தான் என்று ஹவுன்ஸ்லோ பெற்றோல் ஸ்டேஸன் மனேஜர் நாதன் சொன்னவர். சந்தனை பொலிஸ் பிடித்தது சரி என்று சொன்னா பெஞ்சமின்.

மக்கள் கலைந்து போகிறார்கள். பொலிஸ் நாயை கண்டு விட்டு ஏனைய வளர்ப்பு நாய்கள் குலைக்கத் தொடங்கியது. இப்பொழுது நின்று விட்டது. பொலிஸ் நாய்கள் ஒன்றுமே வாயைத் திறக்கவில்லை. அவையளுக்கு பயிற்சி அப்படிப் போல.

சுரேஷ் வீட்டுக்கு வந்து மீண்டும் ஒரு பியர் குடித்தபடி தனது எதிர்காலத்தைப்பற்றி என்னிடமும், ஜெயலத்திடமும் சொன்னான். ஜெயலத் ஒரு முடிவில் இருக்கிறான் ஊர் போக.

சுரேஷ் சென்னான் தன்னால் இப்ப போக முடியாது. அங்கே இரண்டு தங்கச்சிகளை கரை சேர்க்க வேணும், ஒரு வீட்டை கட்டவேணும், அம்மாவை சந்தோஷமாக வைத்திருக்க வேணும், வாதம் வந்த அப்பாவை நல்லபடியாக அவரின் இறுதி காலத்தில் பார்க்க வேணும், தம்பியை எப்படியாவது லண்டனுக்கு எடுக்க வேணும். இவ்வளவு வேணும் களோடு சுரேஷ் இருக்கிறான்.





சுரேஷுக்கு கொஞ்சம் மப்பு ஏறி விட்டது. சாப்பிடச் சொன்னேன். ரெடிமேட் பராட்டாவும் கபாப்பும் இருக்கிறது. வேண்டாம் என்று விட்டான். கதிரையில் சாய்ந்தவன் நித்திரையாகிவிட்டான்.

''மங் யன்னங் மச்சான்'' ஜெயலத்தும் போகிறான். நாளைக்கு வேலை இல்லை. சுகமாக நித்திரை கொள்ளலாம். கதவை மூடி லைற்றை ஓ.்.ப் செய்தேன். சடார் என்றொரு கல் எனது வீட்டின் கூரையில் விழுந்தது. கதவைத் திறந்து லைற்றைப் போட்டேன். இரண்டு வெள்ளைக்கார சிறுவர்கள் கல்லை எறிந்து விட்டு ஓடுகிறார்கள்.

" " " " "

---

## சுனாமி விட்டுச் சென்ற சுவடுகள் !



மூவெழுத்துச் சொல்லால்
முத்திரை பதித்து விட்டு
முழு உலகையும்
முத்தமிட்டுச் சென்ற
சுனாமியே...

அநாதையென்றும்
விதவையென்றும்
நீ சூட்டிய பட்டத்தினால்
தாயொரு புறம்
சேயொரு புறம் என
பரிதவித்துக் கொண்டிருக்கும்
சோகக் கதைக்கு
ஏது விடிவு?

நொடியொன்றில்
ஓராயிரம்
உயிரைக் குடித்த உன்னால்
கோடி ஜென்மம் போயினும்
ஒருயிரை மீட்டுத்தர முடியுமா?

வைத்தியனாய் வாழ்ந்த
பலரை
பைத்தியனாய் மாற்றியும்
ஊமையாய் ஊனமாய்
பலரை மாற்றியும்
உன் கோரத்தைக் காட்டி
விட்டாய்!

காலங்கள் கழிந்தாலும் - நீ
விட்டுச் சென்ற சுவடுகளின்
நாமங்கள் அழிவதில்லை..
சோகக் குரலில் கூச்சலிடும்
உள்ளங்களின் ஓசை
ஒருகாலும் ஒழிவதில்லை!!!


திருமதி. நஸீஹா ஹலால்தீன் – தியத்தலாவ

# வந்திடுமா வசந்த காலம்?

திருகோணமலை
எஸ். ஷரீஃபா

ஏந்தும் கரங்களை
வெறுமையாய் அனுப்ப
வெட்கப்படுபவனே...
அகிலங்கள் யாவற்றுக்கும்
அதிபதியே யாஅல்லாஹ்!
துயரங்களையும்
வேதனைகளையும்
சுமந்திருக்கும் என் இதயம்
உன்னை நினைவுகூர்வதால்
மட்டுமே
நிம்மதி பெறுகிறது!

கஷ்டத்தின் பின் இலகு
இருக்கிறது என்று
வாக்களித்தவனே..
இப்போது என்னிடம்
மிஞ்சியிருப்பதெல்லாம்
எப்போதும் நீ எனை



கைவிட மாட்டாய் என்ற
உறுதியான ஈமான் மட்டும்
தான்!
உள்ளத்தை அறிபவனே
யாஅல்லாஹ்...
தொழுகையைக் கொண்டும்
பொறுமையைக் கொண்டும்
உன்னிடம் உதவி
கேட்கிறேன்!

மாய உலகிலிருந்து
விடுவித்து
நேர்வழி காட்டிய
அருளாளனே...
ஈமானைத் தவிர
இழப்பதற்கேதுமில்லை...
ஏழையிந்த ஏந்திழையாளின்
வாழ்வில்
வந்திடுமா
வசந்த காலம்???





# அவளுக்காய் அகவிரதை!

அக்கரையூர் அப்துல் குத்தூஸ்

அவள் என்
ஆத்மாவில் கலந்து
இரவு பகல் பாராமல்
ஈர்த்தாள் என் இதயத்தை – என்
உள்ளத்துள் நுழைந்து
ஊஞ்சல் கட்டி ஆடி ஆடி...
என்ன மாயம் செய்தாளோ?
ஏன் எனக்கு இவ் அவஸ்தை?
ஐயிரண்டு வாரங்களாய்
ஒரு நிலையில் உள்ளமில்லை
ஓயாமல் துரத்தும் அவள் நினைவு..
ஔடதம் கொடுப்பாளா? – இல்லை அ
ஃறிணை போல் இருப்பாளா?



# முச்சங்கங்களையடுத்த நாலாம் சங்கம் எழுந்த வரலாறு

**நுணாவிலூர் கா.விசயரத்தினம்**
**(இலண்டன்)**

பாண்டிய மன்னர்கள் தமிழை நேசித்துத் தீராக் காதல் கொண்டு முச் சங்கங்கள் அமைத்து இன்பத் தமிழை வளர்த்து வந்தனர். அவர் தமிழின்பால் காட்டிய ஊக்கமும் ஆக்கமும் பல்லாயிரம் புலவர்களை உருவாக்கிக் கணக்கிலடங்கா நூல்களும் எழுந்தன. இச் சங்கங்கள் முறையே **(1)தலைச்சங்கம், (2)இடைச்சங்கம், (3)கடைச்சங்கம்** எனப் பெயர் பெற்றிருந்தன. இச் சங்கங்களின் ஆயுட்காலம் ஒன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு (9990) ஆண்டுகளாகும். இதில் 197 பாண்டிய மன்னர்களும், 8,598 புலவர்களும் இடம் பெற்றிருந்தனர். கடைச்சங்கம் திருவள்ளுவருக்கு பின் (தி.பி.) மூன்றாம் நூற்றாண்டில் முடிவுற்றதென்பர் ஆய்வாளர்கள். ஆகவே தி.மு. (திருவள்ளுவருக்கு முன்) பத்தாயிரம் (10000) ஆண்டுகளிலிருந்து தமிழ் மொழி சங்கத் தமிழாக வளர்ந்து வந்த தொன்மை தெளிவாகின்றது. இதன் பிரகாரம் தமிழை வளர்த்து வந்த பாண்டிய மன்னர்கள் போற்றப்பட வேண்டியவர்கள்.

### *தலைச்சங்கம்*

தலைச்சங்கம் கடலாற் கொள்ளப்பட்ட தென் மதுரையில் அமைந்து தமிழை ஆராய்ந்து வளர்த்து வந்தது. இதில் இறையனார் என்பவர் தலைமை வகித்தாரென்றும், இவரை 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்.' என்றும் கூறுவர். இச் சங்கத்தில் 4,449 புகழ் பெற்ற புலவர்கள் உறுப்பினராக இருந்து பல பாடல்களை இயற்றினர். அகத்தியனார், இறையனார், குன்றெறிந்த முருகவேள், நிதியின் கிழவன், முரஞ்சியூர் முடிநாகராயர் ஆகியோர் அப்புலவர்களில் ஒரு சிலராவர். அகத்தியம், பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை ஆகியவை அவர்கள் இயற்றிய நூல்களிற் சிலவாகும். இச்சங்கம் 4440 ஆண்டுகள் நிலைத்து வாழ்ந்தபின் கடலன்னையுடன் சங்கமம் ஆகியுள்ளது. இத்துடன் தலைச் சங்க நூல்கள் அத்தனையும் அழிந்துபோய் விட்டன. இக் காலப் பகுதியில் 89 பாண்டிய மன்னர்கள் மதுரையை ஆண்டு சங்கத் தமிழையும் வளர்த்து வந்தனர்.





### *இடைச்சங்கம்*

இடைச்சங்கம் குமரி ஆறோடு கூடிய கபாடபுரத்தில் அமைந்திருந்தது. இச்சங்கத்துக்கு முருகக் கடவுள் தலைமை வகித்தாரென்றும், இவரைக் 'குன்றம் எறிந்த குமரவேல்' என்றும் கூறுவர். கிருஷ்ணனும் இச்சங்கத்துக்குத் தலைமை வகித்துள்ளாரென்றும் இவரைத் 'துவாரக் கோமான்' என்றும் கூறுவர். இச் சங்கத்தில் 3,700 புலவர்கள் தமிழ்ப்பணியாற்றினர். தொல்காப்பியனார், இருந்தையூர்க் கருங்கோழிமோசி, திரையன்மாறன், வெள்ளூர்க் காப்பியன், சிறுபண்டாரங்கள், துவரைக் கோமான், கீரந்தை ஆகியோர் அப்புலவர்களில் ஒரு சிலராவர். தொல்காப்பியம், குருகு, வெண்டாளி, வியாழமாலை, அகவல், கலி போன்றவை இப்புலவர்கள் இயற்றிய நூல்களில் ஒரு சிலவாகும். இச் சங்கம் 3700 ஆண்டுகள் வாழ்ந்திருந்தது.

இக்காலப் பகுதியில் சங்கத்துடன் 59 பாண்டிய மன்னர்கள் தொடர்பு கொண்டு தமிழை வளர்த்தனர். கபாடபுரமும் கடலாற் கொள்ளப்பட்ட பொழுது இடைச் சங்கத்துடன் சேர்ந்த அத்தனை நூல்களும் மாண்டு போயின. ஆனால் தொல்காப்பியம் என்ற நூல் ஒன்றுமட்டும் கடற்கோளில் அகப்படாது தப்பியுள்ளது. மேலும் தொல்காப்பிய நூலுக்கு மூத்த இன்னொரு நூலான திருமூலர் திருமந்திரமும் கடற்கோளில் அகப்படாது தப்பிக்கொண்டது. இவை ஒரு தெய்வச் செயலாகும்.

### *கடைச்சங்கம்*

கடைச்சங்கம் உத்தரமதுரையில் நிறுவப்பட்டிருந்தது. இச் சங்கத்தில் 449 புலவர்கள் தமிழ் வளர்ப்பிலும், ஆய்விலும் ஈடுபட்டிருந்தனர். இவர்களுள், சிறுமோதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார், மதுரை மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் என்போர் ஒரு சிலராவர். இப் புலவர்கள் இயற்றிய நூல்களுள் நெடுந்தொகை, நானூறு, நற்றிணை, புறநானூறு, ஐங்குறுநூறு, அகநானூறு, பதிற்றுப்பத்து, 150 கலி, 70 பரிபாடல்,

கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை போன்ற நூல்கள் ஒரு சிலவாகும். இச் சங்கத்தின் வாழ்நாள் 1850 ஆண்டுகளாகும். இக் காலப் பகுதியில் 49 பாண்டிய மன்னர்கள் இச் சங்கத்துடன் தொடர்புடனிருந்து தமிழை வளர்த்தனர். இச் சங்க காலத்தில் சிவபிரான் தன் திருவிளையாடலை ஒரு பாடல் மூலம் தருமி, நக்கீரர் ஆகியோருடன் நடாத்தினார்.

இச் சங்கத்தில் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய பதினெண் மேற்கணக்கு நூல்கள் எழுந்தன. கடைச் சங்க காலத்தில் தமிழ் இலக்கியம் பெரும் புகழீட்டியது. இக் காலம் மதுரை வரலாற்றின் ஊழித் திருப்புமுனை பெற்றிருந்தது. ஆனால் சில தெளிவற்ற சூழ்நிலை காரணமாக இச் சங்கம் தி.பி. மூன்றாம் நூற்றாண்டில் நிலை குலைந்து விட்டது. இதன்பின் நாலாம் நூற்றாண்டு முதல் ஏழாம் நூற்றாண்டு வரை சமணர் ஆதிக்கம் மதுரையில் மேலோங்கியிருந்தது. இதே காலப்பகுதியில் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், ஐம்பெரும் காப்பியம், ஐஞ்சிறு காப்பியம் ஆகிய நூல்களும் எழுந்தன.

தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் இம் முச்சங்கங்களின் காப்பாளர் பதவியைப் 'பத்தாயிரம் (10000) ஆண்டுகளாகப் பேணிக் காத்துத் தமிழையும் வளர்த்த பெருமை பாண்டிய மன்னர்களுக்கு உரித்தானமை மேற் கண்டோம். இவர்கள் சேவை போற்றிப் புகழ்ந்து பாராட்ட வேண்டிய செயலாகும்.

## *நான்காம் தமிழ்ச் சங்கம்*

இனி நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றிய வரலாறு பற்றிக் காண்போம். மாண்புடைய கற்றறிவாளரும் மதகுருவுமான 'வச்ரா நந்தி' (Vajra Nandhi) என்பவர் தலைமையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை மதுரையில் சமணர் உருவாக்கினர். ஆனால் இதை நான்காம் தமிழ்ச் சங்கம் என்று கணிக்கப்படவில்லை. எனவே இதை 'வச்ரா நந்தித் தமிழ்ச் சங்கம்' என்ற பெயரில் சிறு காலம்வரை ஓடிக்கொண்டிருந்தது.
இதன்பின் 19 ஆம் நூற்றாண்டில் தமிழர் மத்தியில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டு உ. வே. சாமிநாதையர், தாமோதரம்பிள்ளை போன்றோர் இருள் நிலையில் மறைவுற்றிருந்த பண்டைய தமிழ் இலக்கியங்களைத் தேடி, ஆராய்ந்து, ஆய்ந்து, அச்சேற்றி, அளப்பரிய





தொண்டுகள் பல செய்து உதவினர். தமிழர் தம் பண்டைய புகழ் நிலைக்கு வர விரும்பினர்.

இந்நிலையில் தமிழ் வள்ளலான பொன்னுச்சாமித் தேவருக்கும் முத்து வீராயி நாச்சியாருக்கும் 21-03-1867 இல் மூன்றாவது மகனாகப் பாண்டித்துரைத் தேவர் தோன்றினார். இவர் இளம் வயதில் தன் தந்தையாரை இழந்து, சேத்திரி ஐயங்காரின் கண்காணிப்பில் வளர்ந்து வந்தார். இவர் கல்வி கற்றுத் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றுப் பல்துறைப் புலவராகவும் பாவலராகவும் இராமநாதபுரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் ஒரு சிறந்த பேச்சாளர். பல இடங்களுக்கும் சென்று சொற்பொழிவாற்றிப் புகழ் பெற்றிருந்தார். இவர் இராமநாதபுரம் பாலவநத்தத்திற்கும் வேறு சில கிராமங்களுக்கும் குறுநில மன்னராகத் திகழ்ந்தார்.

கும்பகோணம் அரசாங்க கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயிருந்த அறிஞர் உ.வே. சாமிநாதஐயருக்கு வேண்டிய நிதியுதவி புரிந்து 'புறப் பொருள் வெண்பாமாலை' 'மணிமேகலை', இன்னும் பல நூல்களை வெளியிட்டுதவினார். தமிழ் நாட்டுக் கடலில் கப்பல்விட எண்ணிய கப்பலோட்டித் தமிழன் வ. உ. சிதம்பரநாதருக்கு அன்று ஓர் இலட்சம் ரூபாய் கொடுத்துதவியமை ஈண்டு நோக்கற்பாலது. மேலும், இவர் 'சைவத்திருமுறைகளை' மதுரை இராமசாமி முதலியார் உதவியுடன் வெளியிட்டுள்ளார்.

செந்தமிழ் வளர்த்த சேதுபதிகளின் மரபில் வந்த குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத்தேவரும், வேறு சில கற்றறிவாளரும் சேர்ந்து பிரித்தானிய ஆளுமையிலுள்ள இந்தியாவின் மதுரையில் 14-09-1901 ஆம் திகதியன்று மதுரை சேதுபதி உயர் பாடசாலையில் ஒரு தமிழ்ச் சங்கத்தை உருவாக்குவதற்காக ஒரு கூட்டத்தைக் கூட்டினர். இம் முதற் கூட்டத்தில் பேரறிஞர்கள் உ.வே. சாமிநாத ஐயர், மறைமலை அடிகள், இராகவ ஐயங்கார், சொல்வேந்தர் சண்முகம்பிள்ளை, திருமயிலை சண்முகம்பிள்ளை, எம். எஸ். பூர்ணலிங்கபிள்ளை, சடகோபன் இராமானுச்சாரியார், சூரிய நாராயணசாத்திரி, திருமணம் செல்வகேசவ முதலியார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் ஆகிய பலர் பங்குபற்றிப் பாண்டித்துரைத்தேவரைப் பாராட்டிச் சென்றனர்.

இக் கூட்டம் மூன்று நாட்கள் நடைபெற்றன. நாலாவது நாளன்று நாலாம் தமிழ்ச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து தொடக்கி

வைக்கப்பட்டது. இதற்குச் சேது நாட்டுப் பெரு வள்ளல் பாஸ்கர சேதுபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். இதற்குமுன் முச்சங்கங்கள் இருந்தமை காரணமாக இச் சங்கத்தை நான்காம் மதுரைத் தமிழ்ச் சங்கம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. பாண்டித்துரைத்தேவர் இச் சங்கத்தின் காப்பாளராகவும், தலைவராகவும் பணியாற்றி வந்தார்.

நாலாம் தமிழ்ச் சங்கம் உருவான அதே தினத்தன்று (1) சேதுபதி செந்தமிழ் கலாசாலை, (2) பாண்டியன் புத்தக சாலை, (3) நூல் ஆராய்ச்சி சாலை ஆகியனவும் நிறுவப்பட்டன.

(1) சேதுபதி செந்தமிழ் கலாசாலையில் (அ) பிரவேச பண்டிதர், (ஆ) பால பண்டிதர், (இ) பண்டிதர் ஆகிய மூன்று வகுப்புகள் நடாத்தப்பட்டுப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்குப் பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றது. இங்கே படித்த மாணவர்களுக்கு இலவச உணவும், தங்குமிட வசதியும் அளிக்கப்பட்டன. பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றுச் சித்தியெய்தியவர்கள் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டனர். இதில் வெங்கிடசாமி நாட்டார், தாராமங்களம் கந்தசாமிப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

(2) பாண்டியன் புத்தகசாலை ஒரு நூல் நிலையமாக இயங்கியது. இந்நூல் நிலையத்துக்கு ஆயிரக்கணக்கான புத்தகங்களையும் ஏட்டுச் சுவடிகளையும் சேதுபதியும், பாண்டித்துரைத் தேவரும் கொடுத்துதவினர்.

(3) நூல் ஆராய்ச்சி சாலை:- இது ஒரு நூல் ஆய்வு நிலையம். இந் நிலையத்தில் பல புலவர்களும், ஆய்வாளர்களும் தமிழ் இலக்கிய ஆய்வுகள் நடாத்தி அவற்றைத் தமிழ்ச் சங்க மூலம் வெளியிட்டனர்.
தேவருக்குச் சொந்தமான வடவெளி தெரு, மதுரையில் அமைந்த ஒரு மாளிகையை அவர் தமிழ்ச் சங்கத்துக்கு நன்கொடையாகக் கொடுத்துதவினார். இந்த மாளிகையில்தான் தமிழ்ச் சங்கம் பல ஆண்டுகளாகச் செயற்பட்டிருந்தது. 'தமிழ் பழம் சரிதம்' என்னும் தலைப்பில் தமிழின் புராதன வரலாற்றைத் தொடர்க் கட்டுரைகளாகச் 'செந்தமிழ்' என்ற மாதச் சஞ்சிகையில் எழுதி வெளியிட்டுள்ளார்.

இவர், 'சிவஞானபுரம் முருகன் காவடிச்சிந்து', 'ராஜராஜேஸ்வரி பதிகம்', 'சிவஞான சுவாமிகள் இரட்டைமணிமாலை', 'தனிப்பாடல்கள்',





'ஆராய்ச்சிப் பதிப்புரைகள், முகப்புரைகள் முதலியன', 'பன்னூல் திரட்டு', 'சைவமஞ்சரி', 'அகப்பொருள்' போன்ற பல நூல்களையும் யாத்து வெளியிட்டுள்ளார். இவைகள் இவரின் இலக்கியப் பணியின் சிறப்பினை எடுத்துரைக்கின்றன.

இனி, நான்காம் தமிழ்ச் சங்கம் தொடர்பில் பாவேந்தர் பாரதிதாசன் யாத்த பின்வரும் முப் பாக்களின் பாங்கினையும் காண்போம். முதல், இடை, கடைச் சங்கங்களைப்போல் இனியுமோர் தமிழ்ச் சங்கம் அமைப்பேன் என்று கூறிய வள்ளல் பாண்டித்துரைத்தேவரின் கூற்றை இவ்வையகத்தார் அந்நாளில் கொஞ்சமேனும் நம்பவில்லை.

**'இனியுமோர் தமிழ்ச் சங்கம் காண்பேன்**
**இருந்த முதலிடை கடைச் சங்கம் போலவே**
**எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை**
**இவ்வையகம் அந்நாளில் நம்பவே இல்லை'**

கொஞ்ச நாள் செல்ல மதுரையில் நாலாம் தமிழ்ச் சங்கம் நிலவைப்போல் விரிந்து, நிமிர்ந்தெழுந்தது. அயர்ந்திருந்த தமிழரின் ஆடலும், பாடலும், அறிவுத் திறனும் மீண்டும் ஒளி பெற்றன. இதைக் கண்ணுற்ற வையகம் வியந்து நின்றது.

**'வியந்தது வையம் சென்றநாள் சிலவே**
**விரிந்தது மதுரைத் தமிழ்ச் சங்க நிலவே**
**அயர்ந்த தமிழரின் ஆடலும் பாடலும்**
**அறிவின் செயலும் மிளிர்ந்தன பலவே'**

பிரவேச பண்டிதர், பால பண்டிதர், பண்டிதர் ஆகிய மூன்று முதிர் நிலை வகுப்புகளை நடாத்தி, மடமைத் தனத்தை உடைத்தெறிந்து, மாசு படிந்த பல தமிழ் இலக்கியங்களைச் செம்மைப்படுத்திப் புகழ்க்கொடி ஏந்தி நின்றான் வள்ளல் பாண்டித்துரைத்தேவர்.

**'புலவர் வகுப்பு மூன்று படைத்தான்**
**புன்மையின் மடமையின் என்பை உடைத்தான்**
**பலதமிழ் இலக்கிய மாசு துடைத்தான்**
**பாண்டித் துரைத்தேவன் புகழ்க்கொடி எடுத்தான்'**

மேலும் கடைச் சங்கத்தை உருவாக்கிய பாண்டிய மன்னன் உக்கிர பெருவழுதி, பாண்டித்துரைத்தேவராகப் பிறந்து நாலாம் தமிழ்ச் சங்கத்தை அதே மதுரையில் நிறுவியவர் என்றும் கூறுவர்.

வள்ளல் பாண்டித்துரைத்தேவர் நாலாம் தமிழ்ச் சங்கத்தில் பத்து ஆண்டுகள் பணியாற்றித் தனது நாற்பத்தைந்தாவது (45) வயதில் 11-12-1911 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்தார். இவர் இறப்பால் தமிழ் நாட்டினர் தாங்கொணாக் கவலையில் ஆழ்ந்தனர். இவரின்பின் இச் சங்க நிலைப்பாடுகள் அனைத்தும் முன்போலன்றித் தேக்கநிலையடைந்து விட்டன. இவர் மறைந்தாலும் இவர் புகழ் இன்றும் மக்களிடையே பேசப்பட்டு வருகின்றது.

மேலும் முச்சங்கங்களான (1) தலைச் சங்கம், (2) இடைச் சங்கம், (3) கடைச் சங்கம் என்ற பெயர்கள் அந்தந்தக் காலப்பகுதிகளில் எழுந்தனவா? என்றொரு கேள்வி எழுகின்றது. தலைச் சங்க காலத்துக்குமுன் ஒரு சங்கமும் இல்லாதது கருதி அச்சங்கத்தைத் 'தலைச் சங்கம்', அல்லது 'முதற் சங்கம்' என்ற பெயர்கள் அமைவதற்கு இடமுண்டு. ஆனால் 'இடைச் சங்கம்', 'கடைச் சங்கம்' என்ற பெயர்கள் அந்தந்தக் காலப்பகுதியில் எழுந்திருக்கவே முடியாது. ஏனெனில் இடை, கடைச் சங்கங்களுக்குப்பின் மீண்டுமொரு சங்கம் உருவாகுமா? என்பது அன்று தெரியா விடயம். எனவே இடைச் சங்கம், கடைச் சங்கம் என்ற பெயர்கள் கடைச் சங்கம் முடிவுற்றுப் பல நூறு ஆண்டுகள் சென்றபின், இனிமேல் வேறொரு சங்கம் தோன்றாதென்பது தெளிவுற்ற பிறகுதான் இடைச் சங்கம், கடைச் சங்கம் என்ற பெயர்களை வைத்தர் என்பதும் தெளிவாகின்றது. இவை இரண்டாம் சங்கம், மூன்றாம் சங்கம் என்ற பெயர்களில் அக்காலப் பகுதிகளில் இருந்திருக்கலாம் என்பதும் சாத்தியமாகும்.

இனி மீண்டும் ஒரு சங்கம் உதயமாக வேண்டும். இச் சங்கத்தின் தேவை மக்களின் தேவையாக அமைய வேண்டும். எனவே முச் சங்கங்களை ஒத்த இன்னொரு சங்கம் ஒன்று இந்தியாவின் புகழ் பூத்து நிற்கும் மதுரை மாநகரில் சிறந்த புலவர் குழாம் ஒன்றுடன் தமிழ் நாட்டு அரசின் ஆதரவில் இலக்கிய மணம் பரவிப் பல்லாண்டு நிலைத்து வாழ்ந்து மக்களை நாடிச் சென்று அவர்தம் வாழ்வியலை அலங்கரித்து நிற்வேண்டுமென உலகத் தமிழ் அறிஞர்களைத் தமிழுலகம் இறைஞ்சுதல் வேண்டி நிற்கின்றது. """""





# மரணம் வருமுன்...

கோவை அன்ஸார்

**''ஒற்றுமை எனும் கயிற்றை பலமாக பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டு பிரிந்து விடாதீர்கள்''**

என்கிறது இறையருள் திருமறை அல்குர்ஆன்.

மக்கள் மத்தியில் சகோதர வாஞ்சை மிளிர வேண்டும். மனங்களை மதிக்கும் நல்ல பண்புகள் மலர வேண்டும். ஒரு மனிதன் தன் மானத்தையும் மரியாதையையும் எப்படி பாதுகாக்கிறானோ அவ்வாறே மற்றவர்களது மானத்தையும் மரியாதையையும் காப்பாற்ற வேண்டும். மற்றவரின் மனதை புண்படச் செய்து வேதனை செய்வது நல்ல பண்பல்ல. உள்ளம் என்பது கண்ணாடியைப் போன்றது. அது உடைந்து விடும் எனில் மீண்டும் ஒட்ட வைக்கும் முயற்சிகள் பயனற்றதாவே ஆகிவிடும். இத்தகைய பண்புகள் நயவஞ்களது குணங்களேயாகும். அவர்கள் தொழுதாலும் நோன்பு நோற்றாலும் சுவனம் செல்ல மாட்டார்கள்.

''ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு சகோதரனாவான். அவன் அவனுக்கு அநீதியிழைக்க மாட்டான். அவனை எதிரியிடம் ஒப்படைக்கவும் மாட்டான். மேலும் ஒருவன் தன் சகோதரனின் தேவையை நிறைவேற்றுவதில் ஈடுபட்டால் அல்லாஹ் அவனுடைய தேவைகளை பூரணமாக்கிக் கொடுப்பான்''.

மேலும் ஒருவருடைய குறையை மறைத்தால் தீர்ப்பு நாளில் அல்லாஹ் அவனது குறைகளை மறைத்தும் அவனை பாதுகாப்பான்.

ஆகவே நம் மரணம் நம்மை ஆட்கொண்டு விடுமுன் மேலான அல்லாஹுத்தஆலா காட்டித்தந்த வழி பிரகாரம் நடந்து ஒழுக்க சீலர்களாயும் நற்பண்புள்ளோராகவும் எம்மை மாற்றிக் கொள்வோம்!!!

## சிறுகதை

# என்னை அறிந்த போது...!



தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா

'கவின் தேனீரைக் குடிப்பா...''

தயாள் அண்ணா என்னை எழுப்பிய போது தான் நான் திடுக்கிட்டு எழுந்தேன். மணி ஆறைத் தாண்டும் முன் என்னை எழுப்பினால் தான் நேரத்துக்கு வேலைக்கு போகலாம் என்பது அவருக்குத் தெரியும். ஏனெனில் கொஞ்சம் சுணங்கினாலும் எங்கள் மேலதிகாரி வசிட்டராகி விடுவார்.

ஏதோ என்னுடைய செலவுகளை கொஞ்சமாவது சமாளித்துக் கொள்ளவும் ஆத்திர அவசரமென்றால் லீவு போட்டு விட்டு போவதற்கும் கொஞ்சமாவது சுதந்திரம் உண்டு. அதனால் தான் வேறு வேலைகளுக்கு போக நினைத்தாலும் இவற்றை நினைத்து மௌனியாகி விடுவேன்.

தயாள் அண்ணா ஊற்றித் தந்த தேனீரை வைத்துக் கொண்டு மிக்ஷர், பிஸ்கட் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தேன். முடிந்து போயிருந்தது. வீட்டில் என்றால் அப்பா ஏதாவது வாங்கி வைத்திருப்பார். எப்படியோ எனக்கென்றால் யோகட் ஆப்பிள் இப்படி ஏதாவது சாப்பிடுவது பிடிக்கும்.

என்றாலும் நான் வீண் செலவுகளை செய்வதில்லை என்ற படியால் எதைக் கேட்டாலும் வசதி இருந்தால் தயாள் அண்ணா வாங்கித் தராமல் இருக்க மாட்டார். இந்த இடத்தில் இன்னொரு சம்பவமும் ஞாபகத்துக்கு வருகிறது. அன்றும் ஒரு நாள் அப்படித்தான்.





நான் ஏ.எல் செய்து கொண்டிருந்த காலமது. அவசரத்தில் சீசன் டிக்கட்டை எடுக்காமல் போய் விட்டேன். எனவே மீண்டும் வீட்டுக்கு போய் அப்பாவிடம் காசு இருபது ரூபாயும் கேட்க வேண்டும் என்று எண்ணியவாறு வந்து கொண்டிருந்தேன். வீட்டு வாசலை நெருங்கும் போது

''அண்ணனைப் பாரு எப்பவாச்சும் காசு கேட்கிறானா... நீயும் வந்து வாச்சிருக்கியே...''

என்று தம்பிக்கு அப்பா அர்ச்சனை செய்து கொண்டிருந்தார்.

நான் வந்த சுவடு கூட தெரியாமல் நழுவிப் போய் விட்டேன்.

எனக்கொன்றும் பெரிய்ய்ய்ய வயதில்லை. பதமான 21 வயசு தான் ஆகிறது. பிரத்தியேகமாக ஏதாவது ஒரு பாடநெறியை நிறைவு செய்யத்தான் நான் இந்த தலை நகரத்துக்கு வந்திருப்பதாக பலரும் நினைத்தாலும் தயாள் அண்ணா இருக்கும் தைரியத்தில் தான் அம்மா என்னை இங்கு அனுப்பியுள்ளார் என்று அவர்களுக்குத் தெரியாது.

ஆம் தயாள் அண்ணா இப்போது என் இலக்கிய நண்பன் மட்டுமல்ல. அறை நண்பனும் தான். அவர் தற்போது தனியார் கம்பனியொன்றில் அக்கவுண்டனாக பணி புரிகிறார். அவருக்கு எப்படியோ... ஆனால் அவருக்கொன்று என்றால் என்னால் தாங்க முடியாது. இவ்வளவு நெருக்கம் நமக்குள் வரக் காரணம் சர்வ சத்தியமாய் இலக்கியம் தான்!!

♦♦♦♦

கவின் என்ன எழுதுகிறாய்?' என்று என் பாடசாலை நண்பனொருவன் கேட்ட போது நான் எழுதியிருந்ததை அவனிடம் கொடுத்தேன். அது பாடல் வரிகளையும் உள்ளடக்கிய எனது கற்பனை தான். அதற்கு சிறியதொரு அங்கீகாரம் கூட

கிடைக்கவில்லை. மாறாக அவன் மற்றவர்களுக்கும் அதைக்காட்டி என்னை ஏளனம் செய்தான். (தற்போது என் கவிதைகளை பத்திரிகைகளில் பார்ப்பதும் அவனுடைய நண்பர்களிடம் இந்த கவிஞனுடைய நண்பன் தான் நான் என என் பெயர் கூறி தன்னை அடையாளப்படுத்திக் கொள்வதும் வேறு கதை). எனினும் நான் என் முயற்சிகளை நிறுத்தவில்லை. சில நாட்களில் என் வரிகளை பார்த்து விட்டு வைரமுத்துவின் வரிகளை '**காப்பி**' பண்ணியிருக்கிறான் என்பார்கள். அப்போதெல்லாம் ஆஹா அந்தளவிற்கு நன்றாகயிருக்கிறதா என்று மனசுக்குள் சிரித்துக் கொள்வேன்.

நான் வாசிப்பில் அதிக ஆர்வம் கொண்டவன் என்று அம்மாவும் கூறுவார். தரம் மூன்றிலிருந்த போதே அம்மா பல கதைப் புத்தகங்களை வாங்கித் தந்திருக்கிறார். தரம் ஆறு வரைக்கும் பல போட்டிகளிலும் கலந்து கொண்டிருந்தேன்.

ஆனால் என்னை அடிக்கடி பாடசாலை மாற்றியதால் ஏதோ ஒரு தாழ்வு மனப்பான்மை என்னை வறுத்தெடுத்து செயலிழக்கச செய்தது. இப்படி நாம் ஊர் விட்டு ஊர் செல்லக் காரணம் அம்மாவின் இடமாற்றம் என்பதை விட எங்கள் அப்பாவின் சகோதரர்களுடன் ஏற்பட்டிருந்த வாக்குவாதம் தான் என்று பின்னாட்களில் அறிந்தேன்.

என் சிறு வயது பராயத்தில் எல்லாம் முதல் ஐந்து நிலைகளுக்குள் வந்த நான் மற்ற பாடசாலைகளில் ஒன்பதுக்கும் பிற்பட்ட ஸ்தானத்துக்கு வந்த போது முழங்கால்களுக்கிடையில் முகம் புதைத்து யாருக்கும் தெரியாமல் அழுதிருக்கிறேன். அம்மாவைத் தவிர அனைவரும் என்னை குறைத்து மதிப்பிடும் போதெல்லாம் எனக்கென்று அன்பு காட்ட யாராவது இருந்தால்... என்றெண்ணியெல்லாம் உள்ளுக்குள் மருகியிருக்கிறேன். ம்ம் அந்த கனவை எல்லாம் நனவாக்கத் தான் நானிருக்கிறேன் என்று தயாள் அண்ணா எனக்கு சொல்வது போல் இப்போது உணர்வதுண்டு.

ஏதோ வாழ்க்கையை கடந்து கொண்டிருந்த போது தான் என்





வகுப்பு நண்பர்களுக்கும் உயர் வகுப்பு அண்ணா மார்களுக்கும் இடையில் பாடசாலையில் சண்டை நடந்தது. ஆனாலும் அதில் கொஞ்சமும் சம்பந்தப்படாத நானும் அம்மாவின் முன்னாலேயே அதிபரால் தண்டிக்கப்பட்ட போது வாழ்க்கை மீதிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் இல்லாமல் போயிற்று.

அம்மாவின் முகம் பார்க்க முடியாதளவுக்கு வேதனையாயிருந்தது. அதற்கான காரண கர்த்தாக்கள் சில ஆசிரியர்களும் தான் என்ற போது அதிர்ச்சியடைந்தேன். அவர்கள் அம்மாவின் முன்னேற்றத்தில் பொறாமை கொண்டவர்கள் என்றும் அவர்கள் உதட்டில் தேனும் நெஞ்சில் விஷமுடனும் பேசுபவர்கள் என்றும் சொல்லி அம்மா என்னை தேற்றினார்.

எப்படியோ புதிய பாடசாலையில் இருந்த மூன்று வருடங்களும் படிக்க முடியாதவர்களுடன் தான் நட்பு கொள்ள முடிந்தது. கெட்டிக்காரப் பிள்ளைகள் ஒரு ஆசிரியையின் மகன் என்று கூட எண்ணாமல் என்னை ஒதுக்கியது ரொம்பவும் வருத்தமாயிருந்தது.

பிறகு நான் சாதாரண தரப் பரீட்சைக்கு தயாராகியிருந்ததால் என் சுட்டித் தனங்கள் யாவும் தற்காலிகமாக விடை பெற்றோடின. பின்னே? என் குடும்பத்தார் யாவரும் படித்து பெரியவர்களாயிருக்கும் போது நான் மட்டும் இப்படியே இருப்பதா என்ற சவாலுடன் பரீட்சைக்கு என்னை தயார் படுத்திக் கொண்டிருந்தேன்.

ஆனால் என் தலையெழுத்தில் சீர்குலைவு ஏற்பட்டிருந்தது. அக்காலகட்டத்தில் என் அம்மாவின் ஆப்பரேஷன் நடந்தது. அதனால் மிகவும் நொந்து போயிருந்தேன். என் தந்தையின் வருமானத்திலும் முன்னேற்றங்கள் இருக்கவில்லை. பாவம் அவரும் தான் என்ன செய்வார்? மிகவும் உருக்குலைந்து யாரோ போல் ஆகியிருந்தார்...

இந்த நேரம் பார்த்து தான் அந்த சந்தோஷமானதும் சங்கடமானதுமான செய்தியை என் சின்னம்மா என்னிடம் கூறினார்.

ஆம்! அம்மா வைத்தியசாலையில் இருக்கும் நேரம் பார்த்து என் தங்கை பருவமடைந்திருந்தாள். மூளை கசங்கிப் போனது. சுயமாக எதையும் சிந்திக்கும் அவகாசம் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவாறு மற்ற அனைத்து அத்தை பெரியம்மா மாருக்கும் சாடைமாடையாக விஷயத்தைச் சொல்லி வீட்டுக்கு வருமாறு கூறினேன்.

♦ ♦ ♦ ♦

என் இளமையின் நான்கில் ஒரு பகுதி அவ்வாறு கழிந்தது. இதற்கிடையில்நான் உயர்தரத்துக்கும் தெரிவாகியிருந்ததுடன் அறநெறி பாடசாலையில் ஆசிரியனாக கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

இடைப்பட்ட இந்த காலத்தில் தான் என் வாழ்வின் திருப்புமுனை ஏற்பட்டதென்று சொல்ல வேண்டும். மனதில் தோன்றிய அத்தனையையும் கவிதைகளாக மொழி பெயர்த்தேன். அவற்றை பத்திரிகைகளுக்கும் அனுப்புமாறு அம்மா தான் சொன்னார். நன்றாய் இருந்திருக்க வேண்டும். மாதமொன்று செல்லு முன்பே பிரசுரமாகியிருந்தது.

எத்தனை மகிழ்ச்சி!
எத்தனை கூச்சல்!!

இதையெல்லாம் காட்டிய பின்பு 'இங்க பாருடா கழுதை கவிதை எழுதுது' என்று என்னை கேவலப் படுத்திய நண்பன், தன் காதலிக்கு கொடுப்பதற்காக என்னிடம் கவிதை எழுதி கேட்கத் தொடங்கினான். நான் பெருமைப்பட்டுக் கொள்ளவில்லை. அவன் தான் அசடு வழிந்தான். எனினும் மென்மேலும் என் திறமையை வளர்க்கும் முயற்சிக்கு உத்தரவாதங்கள் இருக்கவில்லை. எப்படி எழுதுவது எதில் எழுதுவது என்று தெரியாமல் அவஸ்தை பட்டிருக்கிறேன். அப்படியிருக்கையில் தான் 'கவின் உனக்கொரு





கடிதம் வந்திருக்கு' என்று அம்மா தந்து விட்டுப் போனார்.

முக்கியமானதொரு விடயத்தைக் கூற மறந்துவிட்டேன். உயர்தர வகுப்பில் இருந்த காலத்தில் சின்னதாய் ஒரு காதல் அரும்பியது. ஆனால் அவளுக்கு அப்படியிருந்திருக்காது. என்னைப் பார்த்து ஒரு நாளாவது வெட்கப்பட்டதில்லை. நகம் கடித்ததுமில்லை. நிலத்தில் கால் விரலால் கோலம் போட்டதுமில்லை. எதுவுமில்லை. எனவே நட்பு ரீதியாகவேனும் கடிதம் போடுவதென்றால் எனக்கு அவளைத் தவிர யாரும் இருக்கவில்லை.

அவளே இல்லை என்று ஆன பிறகு.. இப்போது யாராக இருக்கும்? என்று கலவரமடைந்தேன். கடிதத்தை வாசிக்க வாசிக்க கலக்கமும் சந்தோஷமும் ஒன்றாக உற்பத்தியானது. சாராம்சம் இது தான்.

***நான் தயாள். எழுத்தாளன். உங்கள் கவிதைகளின் தரம் பற்றி என் நண்பன் கூற கேட்டேன். கருத்துக்களை பரிமாறிக் கொள்ளலாம். தொடர்பு கொள்க - தயாள்.***

ஓரிரு மாதங்களுக்குள் என் படைப்புகளுக்குக் கிடைத்த அங்கீகாரமா? அல்லது வேறு யாருடைய கவிதை வரிகளாவது தெரியாமல் என் கவிதைகளில் உள்ளடக்கப்பட்டு விட்டதா என்ற பயம் என்னை தின்றது. தயங்கிய படியே 'கோல்' பண்ணிய போது தான் தயாள் அண்ணா மிக அன்புடன் கதைத்தார்.

என் கவிதைகள் பற்றி சிலாகித்து பேசினார். நன்றாக எழுதுவதாக சொன்னார். என் நண்பர்களுடன் அவரை ஒப்பிட்டு வியந்தேன். விளையாட்டாக நான் அவரை போஸ்ட்காட் தயாள் எனும் போது வஞ்சகமில்லாமல் சிரித்து அதை ரசிப்பார்.

♦ ♦ ♦ ♦

நாட்கள் செல்லச் செல்ல நானும் தயாள் அண்ணாவும் மரியாதை எனும் போர்வையிலிருந்து விலகி அன்பென்ற பந்தலுக்குள் இணைந்து கொண்டோம். நீண்ட ஒரு விடுமுறையின் போது தயாள் அண்ணா எங்கள் வீட்டுக்கு வந்து தங்கியிருந்த போது தான் இலக்கியத்தின் சுவை உணர்ந்து அதையே மூச்சாக எண்ணி செயல்பட்டேன் நான்.

இதைப் பார்த்து இலக்கியம் சோறு போடுமா என்று என்னை பரிகசித்தவர்களும் இருக்கிறார்கள். எனினும் என் இலக்கிய வேட்கைக்கு நல்ல பதிலை தயாள் அண்ணா தந்து கொண்டிருந்தார். அவர் தலை நகரில் வீடெடுத்தவுடனேயே என்னையும் அழைத்துக் கொண்டார்.

இங்கு வந்த பிறகு தான் நான் புதிய உலகமொன்றை கண்டு கொண்டேன். இலக்கியத்தின் நுணுக்கங்களை கற்றுத் தந்தார். என் சிறு சிறு குறைகளை சீர் படுத்தினார். எதிர்மாறான எண்ணங்களிலும் பல சிக்கல்களிலும் துவண்டிருந்த என்னை உற்சாகப்படுத்தினார். 'என் நண்பன் துணிச்சல்காரன்' என்று சொல்லி என்னைப் பாராட்டினார்.


தலை நகரில் நடக்கின்ற பல இலக்கிய விழாக்களையும் நான் தரிசிக்கக் காரணம் தயாள் அண்ணா தான். பிரபலமான எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் என்னுடனும் பேசும் போது எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருந்தது தெரியுமா?? என் குடும்பத்தார் கூட மிகவும் மகிழ்ச்சியடைந்தார்களே.

தற்போது என் படைப்பும் நூலுருப்பெறப்போகிறது. முழுக்காரணமும் என் தயாள் அண்ணா தான். அவருடைய மேலீடு இல்லாமல் என்னால் எதையும் சாதிக்க முடியாது. நான் அவரை மிக மதிக்கிறேன். நேசிக்கிறேன். ஆம்! அவர் தான் இப்போது என் குரு! உலகம்! எல்லாமே!





# தொலைந்த பாதங்களின் சுவடுகளேந்தி...!



மாவனல்லை ரிஷான் ஷெரீப்


பார்வைக்கு புலப்படாத
பாதங்களைக் கொண்டது
நீருக்குள் அசைந்தது
சிறபங்களெனக்கண்ட
உயிர்த்தாவரங்கள்
ஒளித்தொகுக்கும் வழியற்று
முலைகளை அலங்கரித்திட
விட்டுவந்த துணையை
குமிழிகள் செல்லும்
பரப்பெங்கிலும் தேடியது!

எல்லாத்திசைகளின்
முனைகளிலும்
வாழ்வின் இருளே
மீதமிருக்க
காணும் யாரும்

உணராவண்ணம்
மூடா விழிகளில்
நீர் உகுத்து
அழகு கூரை கொண்ட
கண்ணாடிச்சுவர்களிடம்
தன் இருப்பை உணர்த்த
கொத்திக் கொத்தி
நகர்ந்திற்று
செம்மஞ்சள் நிற
தங்கமீனொன்று
அது நானாகவும்
இருக்கக் கூடும்!!!

---

# நியாயமா?



உன்
சுவாசக் காற்றில் கூட
கவிதை எழுதியவன்...

உன் நினைவுகளால்
ஆயுள் ரேகையை
பலப்படுத்திக் கொண்டவன்...
உன்
சின்ன அசைவுகளுக்கு
காரணம் கற்பித்தவன்..


ஒரு நட்சத்திரத்தை நிலவாக
பதவியுயர்த்தி
மகுடம் சூட்டியவன்..

உன்
கன்னம் முதல் பாதம்
வரை ஆராய்ந்து
எதிர்காலக் கணக்கு
போட்டவன்..

உனை அழகான
தென்றலாக்கி
சுவாசித்தவன்..

ஆனால் நீ???

நிந்தவூர் ஷிஃமான் எம். மாஹிர்



# பெண்களுக்குப் பாரபட்சம் காட்டுவதையும், இழிவாக நடாத்துவதையும் இல்லாதொழிப்போம்!

டப்ளியு. எம். வஸீர்

மனிதன் பால் ரீதியில் ஆண்,பெண் என உயிரியல் வகையில் இரு பிரிவுகளுக்கு வகுக்கப்படுகின்றனர். இவ்விரு பிரிவுகளில் பெண் அநேகமாக பாரபட்சம் காட்டுதலுக்கு உட்படுகின்றாள். தாய், சகோதரி, மனைவி போன்ற பல்வேறு பாத்திரங்களை வகிக்கும் பெண் குடும்பத்தினுள் பெருமளவில் இத்தகைய பாரபட்சம் காட்டுதல்கள் மற்றும் இழிவாக நடாத்தப்படுதல்களுக்கும், சில வேளைகளில் மனைசார் வன் செயல்களுக்கும் இரையாக வேண்டியுள்ளாள்.

கல்வி கற்றல் மற்றும் தொழில்களில் ஈடுபடுதல் போன்ற பல துறைகளில் பெண்கள் பாரபட்சம் காட்டுதல்களுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு பெண்களுக்கு எதிராக ஏற்படுகின்ற வேறுபாடுகளும், இழிவான செயல்களை எதிர்த்து டொமினிக்கன் இராச்சியத்தின் சர்வாதிகாரியாக இருந்த ரபாயல் ரெஜ்லோவுக்கு எதிராக குரல் எழுப்பிய மிராபல் (Merabal) சகோதரிகள் மூவரும் 1961ம் ஆண்டு கொலை செய்யப்பட்டனர்.

இந்த கொலையின் மூலம் ஆரம்பித்த பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பது பற்றிய கலந்துரையாடல் ஐக்கிய நாடுகளில் பொது மாநாட்டினால் 1999ல் நிறைவேற்றி, ஒவ்வொரு வருடமும் நவம்பர் 25ம் திகதி பெண்கள் வன்முறைகள் எதிர்க்கும் சர்வதேச தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கை சனத்தொகையில் 52% க்கு மேற்பட்ட பெண்கள் அன்னிய செலாவணியை ஈட்டுவதில் ஆண்களை விட முன்னிலை வகிக்கின்றனர். வெளிநாட்டில் பணிபுரியும் பெண்களும்





ஆடைத்தொழிற்சாலைகளில் பணி புரியும் இளம் பெண்களும் இலங்கையின் பிரதான அன்னிய செலாவணி ஈட்டுத்தரக்கூடிய தேயிலைத் தொழிலில் ஈடுபடும் பெண்கள் ஆகியவர்களால் ஏற்படும் சேவை மகத்தானது. இன்னமும் மனைசார்ந்த பணி, சிறுவர் மற்றும் முதியோர்களை பராமரிப்பதில் பிரதானமாக இலங்கைப் பெண்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

குடும்பத்தினுள் பெண்கள் முழு நேர சேவையில் ஈடுபட்டிருப்பினும் வீட்டு வேலைகள், பிள்ளைகளைப் பேணிக் காத்தல் பற்றிய பொறுப்புக்களின் பிரதானமான பங்கொன்று அல்லது அதைப் பூரணமாக செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் பெண்ணுக்கு உள்ளது.

ஒரு பெண் குடும்பத்தின் முழுப்பராமரிப்பையும் கொண்டு சென்றாலும் தாய்க்கு பிள்ளைகளின் பாதுகாவலர் அந்தஸ்து உரித்தாக்கப்படுவது சட்டமுறையான விவாகமொன்று நடைபெறாதுள்ள சந்தர்ப்பத்தில் மாத்திரமே. சட்டமுறையான விவாகமொன்றினால் கிடைக்கும் பிள்ளைகளின் பாதுகாவலர் அந்தஸ்து ஒரு தாய்க்கு உரித்தாவதில்லை.

சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு கடன் வசதிகள் மற்றும் பயிற்சிகளை பெற்றுக் கொடுப்பதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. பல பெண் ஊழியர்கள் வெளிநாடுகளில் பல விதமான கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பதுடன் திரும்பி வருவது, சிதைந்திருக்கும் குடும்பத்திற்கே. வேதனங்கள் பெறாத மலைசார் ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்களைப் போல் நான்கு மடங்காகும். விவசாய ஓய்வூதியத்திட்டத்தினுள் பெண்களின் பதிவு மிகவும் குறைந்த மட்டத்தில் உள்ளது. விவசாய ஓய்வூதியத்திட்டத்தில் அது 23% ஆக உள்ளதுடன் கடற்தொழில் ஓய்வூதியத்திட்டத்தில் 1% ஆகவும் உள்ளது.

சமுதாயத்தில் பெண் பலவீனமுள்ளவராகக் கருதுதல் மற்றும் அதே விதத்திலேயே நடாத்தப்படுதல், விதவைகள், மணநீக்கம் செய்தவர்கள் மற்றும் தனிமையிலான தாய்மார்கள் பீடிக்கப்பட்ட குழுவொன்றாக ஆகுதல்.

சுகாதாரம் மற்றும் போசணை போன்ற விடயங்களில் பெண்களுள்

சுமார் 50% பேர் மந்த போசணையால் பீடிக்கப்படுகின்றனர். (உதாரணம்:- சுகாதாரம், போசணை, குடும்பக்கட்டுப்பாடு, குழந்தைகள் மற்றும் நோய்களைத் தடுத்தல் மற்றும் சுகப்படுத்தல்) பிரசவத் தொகுதியில் புற்று நோய்களை முதனிலையில் இனங்காணுதல் பற்றிய அறிவை பெண்களுக்கு பெற்றுக் கொடுத்தல்

விஷேசமாக முலைகளில் மற்றும் கர்ப்ப வாயிலில் உண்டாகின்ற புற்று நோய்கள், எச்.ஐ.வி வைரஸ் எயிட்ஸ் நோய் உட்பட பாலியல் ரீதியில் நோய்களின் அபாயகரத்தன்மை, தாயின் உயிரைப்பறிக்கும் சட்ட விரோத கருச்சிதைவுகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பூப்பெய்துதல், கர்ப்பிணியாதல், மாதவிடாய் நிற்றல் மற்றும் வயது முதிர்தல் போன்ற பெண்களின் வாழ்க்கைச் சக்கரத்தில் பல சந்தர்ப்பங்களில் பிரச்சனைகள் நிகழ்கின்றன.

கணவரால் ஏற்படுகின்ற தொல்லைகள், சேவைத்தளத்தில் ஏற்படுகின்ற பாலியல் தொல்லைகள், போக்குவரத்தின் போது ஏற்படுகின்ற பாலியல் தொல்லைகள், யுத்த மோதல்கள் நிகழ்கின்ற பல்வேறு வன்செயல்கள் போன்று சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலிருந்தும் பெண் கற்பழிப்பு பற்றிய அறிக்கைகள் கிடைக்கப் பெறுகின்றன.

முன்பை விட இப்போது பெண்களை நன்கு கவனிக்கிறார்கள் என்றாலும் சீதனக் கொடுமை ஒழிந்தபாடில்லை. தொழில் ரீதியாகவும் பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்டுவதுண்டு. பாதையில், பஸ்ஸில் என்று ஆண்களின் வக்கிரப்புத்தி பெண்கள் மீது தாவப்படுகிறது.

பெண்களுக்கு சமவுரிமை கிடைத்து விட்டது என்று கூறிக் கொண்டாலும் பொருளாதார, சமூக, கலாச்சார, அரசியல் மற்றும் குடியியல் ரீதியில் இன்னும் இரண்டாம் பட்சமாகவே கவனிக்கப்படுகின்றனர். இதன் மூலம் பெண்களின் உரிமை மீறல் அப்பட்டமாகவே நடக்கிறது. இவ்வாறான கருத்துக்களினூடாக பார்க்கிற போது விசேஷ ஒரு குழுவாக பெண்கள் மீது கவனம் செலுத்தி அவர்களது உரிமைகளை பேணிக்காப்பது அத்தியவசியமாகிறது.

நன்றி:- **Humanitarian Legal Literacy**






## கலைந்த கனவில் நுழைந்த ஏக்கம்!

ஓலைக்குடிசையில் பிறந்த
ஏழை மகன்
ஓ.எல் ஏ.எல். சித்தி...

கழகம் செல்ல
கண்ட கனா
நனவானது...

தாயின் கண்ணீராலும்
தந்தையின் செந்நீராலும்
பட்டமும் பதவியும்
பெற்றேன்...

ஆஹா
வீட்டின் ஓலை
ஓடானது...
ஒளி மின்சாரத்துடன்
சம்சாரமும்
வசந்தத் தென்றலாய்
வாசம் வீசியது...



தட்டி எழுப்பினான்
நண்பன்..
கனவுகள் என்றான்.

ஆம்
திணைக்களத்தில்
இருக்க வேண்டிய பட்டம்
திண்ணையில்
உண்ணாவிரதம்...

பள்ளிக்கல்வியும்
கழகக் கல்வியும்
கன்னி கழியா
முதியவனாக்கி விட்டது
என்னை!

*கிண்ணியா ஆர். சதாத்*

with Best Compliments From...

Al Haj A.B.M. Suhair (J.P.)
(Whole Island)
President Islamic walfare Association
Dharga Town.

**SUHAIR HAJJ TRAVELS**
**HAJJ & UMRAH OPERATORS**
Saudi Tel: 0500-296492

No. 35/7, Isnapulla Road,
Dharga Town,
Sri Lanka.
Tel : 034-4938135
Tel/Fax : 034-2270265

Solid Gold Jewellers,
214, Galle Road, Aluthgama,
Sri Lanka.
Tel : 034-2270536
Mobile : 0777-889924

# இசைக்கோ நூர்தீன் பற்றிய சில குறிப்புக்கள்

நிலாக்குயில்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் வசித்து வரும் நெய்னா முஹம்மது நூர்தீன் அவர்கள் சுமார் அரை நூற்றாண்டுகளாக இலக்கியப்பணிக்குள் தன்னை முழுமையாக அர்ப்பணித்து வருகிறார். கொழும்பு ஸாஹிராக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், தற்போது M/S Noorsons (Pvt) Ltd, M/S Noorsons Furniture Hirers, Al Samit Interna'l ஆகிய நிறுவனங்களுக்கு தலைவராகவும் இருக்கிறார்.

ஊடல் கொண்ட இதயங்களுக்கு தன் பாடல் மூலம் ஆறுதல் தந்தவர். தேடல் உள்ள நெஞ்சங்களுக்காக தன் எழுத்து மூலம் மாறுதல் சொன்னவர். கடந்த ஐந்து தசாப்தங்களாக வீச்சுடன் கூடிய இலக்கியம் யாக்கும் நூர்தீன், கலைஞர், எழுத்தாளர், ஊடகவியலாளர் போன்ற பன்முகங்கொண்டவர்.

இலங்கை திருநாடு சுதந்திரம் கண்டது முதல் இற்றை வரை ஏறத்தாழ 2000 பாடல்களை எழுதி மெட்டமைத்து பாடியும் உள்ளார். கலாபூஷணம் புன்னியாமீன் தொகுத்த இலங்கை எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்களின் விபரத்திரட்டு தொகுதி 08லும் இவர் பற்றிய அறிமுகம் காணப்படுகிறது.

''வான் அலைகளில் தேன் துளிகள்'' என்ற இவரது புத்தகம், பாடல் மீது இவர் கொண்டுள்ள ஈடுபாட்டை பறைசாற்றி நிற்கிறது. இலக்கிய அரங்குகள், முழுமையும் தெரிந்த ஒரு கலைஞனாகவே இவரை ஏற்றுக்கொண்டுள்ளது. பாடல்கள் தவிர 30 சிறுகதைகளையும் எழுதியுள்ளார். அவை தீனுல் இஸ்லாம், அருவி, மாணவர் மலர், தமிழன், தினகரன், சிந்தாமணி, தினபதி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரமாகி உள்ளதுடன், சக்தி, மலேசிய, சிங்கப்பூர் வான் அலைகளிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

ஏழு இறுவட்டுக்களை (CD) வெளியிட்டுள்ளதுடன் சென்னை ரெக்கோடிங் கம்பனிக்காக பாடியுள்ள நூர்தீன் வெளிநாடுகளிலும், தாயகத்திலும் இசைக்கச்சேரிகளை நடத்தியுள்ளார்.





வானொலியில் இசைச்சித்திரம், நாடகம், கவிதை, இஸ்லாமிய கீதம், பொப்பிசை போன்ற நிகழ்ச்சிகளையும் தந்துள்ளார். மீலாத், ஹஜ், நோன்பு தினங்களில் இடம்பெறும் விசேட அரங்குகளில் பாடல்களை பாடியவர். டேன் (DAN) தொலைக்காட்சியிலும் இவரது பேட்டி இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

''வானலைகளில் தேன் துளிகள்'' என்ற அவரது நூலில் ''...அரசியல் கலப்பற்ற சமுதாய உணர்வோடு என் வாழ்நாளில் சில பகுதியை கலைச்சேவைக்கும், மதச்சேவைக்கும் தொடர்ந்து அர்ப்பணிக்க வேண்டும் என்ற இந்த ஏழையின் குறிக்கோளை அல்லாஹுதஆலா பொருந்தச் செய்வானாக...'' என்று கூறியதிலிருந்து அறநெறியில் அதீத ஈடுபாடு கொண்டவர் என்று புலப்புடுகிறது.

இவர் பெற்ற விருதுகள் சில...

1. இசைத்திலகம்
2. இசைக்கோ
3. மூஸிக்நூரி
4. சாமஸ்ரீ இசைவாணன்
5. இசைக்கலாநிதி
6. இசைப்பேராசிரியர்
7. கலாபூஷணம்

கொழும்பு இளம்பிறை இசை மன்றத்தின் தலைவராகவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் கலைஞர் முன்னணியின் தலைவராகவும், இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகத்தின் பொருளாளராகவும் இருந்து கலைச்சேவைகளை நல்கி வரும் இவரிடமிருந்து இன்னும் பல கலைச்சேவைகளை இலக்கிய உலகம் எதிர்பார்க்கிறது.

**(தொடர்ச்சி மறுபக்கம்)**

**ப்ரியமான வாசகர்களே!**
**உங்களால் இயன்ற அன்பளிப்புக்களை வழங்குவதன் மூலம் ''பூங்காவனம்'' சஞ்சிகையின் தொடர் வளர்ச்சிக்கு உதவுங்கள்**

# இசைக்கோ நூர்தீனின்
# ‘‘வான் அலைகளில் தேன் துளிகள்’’
# நூல் பற்றிய ஓர் விமர்சனப்பார்வை

வான் அலைகளில் தேன் துளிகள் ஒரு பாடல் தொகுப்பு. அல்ஹாஜ் N.M. நூர்தீன் தனது 05 தசாப்த கால படைப்புக்களை சிரமம் பாராது வாசகர் மனதை கொள்ளை கொள்ள வழங்கியிருக்கிறார்.




தனது திறமையால் உருவாகிய இனிமையான பாடல்களை பிறர் பாடிய போது அது தனக்கு எத்தனை பரவசமாக இருந்தது என்பதை ‘‘...அவர்கள் அன்று பாடிப் பரவசமூட்டிய, மறக்க முடியாத சொற்பிரவாகங்களை இசையோடு பிசைந்து இன்ப இனிப்புகளாய் நுகர்ந்த நாட்களை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

அவற்றுள் சிலவற்றை தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற இங்கே அடக்கியுள்ளேன்..’’ என அவர் குறிப்பிடுவதிலிருந்து புலப்படுகிறது.

இப்புத்தகத்தின் முதல் பாடலாக காணப்படுகின்ற ‘‘வாழ்க நம் தாய்நாடு’’ என்பது இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் இயற்றப்பட்டதாகும். யாப்பிலக்கணம் கற்றுத் தெளியாத பள்ளிப்பருவத்தில் தன் உள்ளத்தில் துள்ளி எழுந்த நாட்டின் மீதான அக்கறையில் பாடிய பாடல்கள் சக்கரையாய் இருப்பதில் வியப்பு தான்.

நூர்தீனின் இளமைக்காலமானது, இலக்கிய வித்தகராக திகழ்ந்த தனது தந்தையான இஸ்லாமிய அறிஞரின் வாழ்வுச்சூழலின் பின்னணியாக அமைந்திருந்தமை அவர் பெற்ற வரம் என்றே கூறலாம்.

நூர்தீன் அவர்களின் பாடல் திறமையை தீனுல் இஸ்லாம், அருவி, தமிழன், தினகரன், சிந்தாமணி இத்தியாதி... போன்ற பத்திரிகைகள் நன்கறியும்.

இசையுடன் பாடுதல் பற்றின சர்ச்சையை நூர்தீன் பின்வருமாறு தீர்த்துச்





செல்கிறார்.


‘‘முஸ்லிம்களிடையே, பாடல்களை இசையுடன் பாடுதலில் பலதரப்பட்ட கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். அந்த வேற்றுக்கருத்துக்களை வெளியிடும் உள்ளங்களும் ஒரு தடவையாவது தனது எண்ணத்தைப் பாடல்கள் மூலம் வெளியிட்டே இருக்கும். இசை ரசனையுடன் பாடியே இருக்கும் என்பதை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது என்பது எனது அபிப்பிராயம்’’.

இக்கருத்து இன்றைய இஸ்லாமிய சமூகத்தில் தர்க்கத்துக்கு உரியதாயிருந்த போதும் தனது பாடல்கள் மூலம் தன் கருத்தை எவ்வாறு நிலை நாட்ட முனைந்துள்ளார் என்பது சுவையான அம்சமாகும். இஸ்லாத்தின் மாண்புமிகு விழுமியங்களை உள்வாங்கி அவற்றை வாழ்வின் ஒவ்வொரு துடிப்பிலும் கடைபிடித்து ஒழுக வேண்டும் என்பது தொழுகை, நோன்பு, ஸக்காத் போன்ற பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நயந்து எழுதப்பட் இவர் பாடல்களை வியந்து பாராளுமன்ற உறுப்பினர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்கள் தன் வாழ்த்துரையில் ‘‘...பாடல்களைத் தாமே இயற்றி, அவற்றிற்கு மெட்டமைத்து, இசையமைத்து பல சந்தர்ப்பங்களில் சொந்தக்குரலிலேயே அவற்றை இசைத்து கேட்டு இன்புறுவோரை பரவசப்படுத்தும் இவரது ஆற்றலையிட்டு நான் வியப்படைவதுண்டு’’ என்றும்,

பாராளுமன்ற ஆலோசகர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்கள் ‘‘...வாய்விட்டு வகுப்பறையில் பாடிய அவரை, பொன் பட்டுப்போர்த்தி வாழ்த்துவேன் என, அன்று நான் கனவு கண்டேனா? இல்லவே இல்லை. அதிசயம். ஆனால் நிகழ்ந்து விட்டது!’’ என்கிறார். மேலும் அல்ஹாஜ் என். எம். அமீன், யூ.எல். அலியார், மர்ஹூம் எம்.எச்.எம். ஷம்ஸ், எஸ்.எச்.எம். ஜெமீல் ஆகியோரும் தத்தமது அணிந்துரைகளில் வாழ்த்துப் பா(பூ)க்களை தூவுகின்றனர்.

விசேடமாக பாடல்களின் முடிவில் திருநபி (ஸல்) அவர்களினால் மொழியப்பட்ட ஹதீஸ்கள் உள்ளடக்கியிருப்பது சிறப்பம்சமாகும். இளம்பிறை இலக்கிய மன்றத்தினால் வெளியிடப்பட்ட ‘‘வான் அலைகளில் தேன் துளிகள்’’ புத்தகத்துடன் நிற்காமல் இன்னும் பலவற்றை வெளியிட வாழ்த்துகிறோம்.



# மேன்மை மிகு நாயகமே !

- சுங்காவில் றியாழ்

நூரே முஹம்மதெனும்
நீங்காவொளியினால்
பாரே மலர்ந்ததெனும்
பாமாலை முழங்கி
பூத்துக்குலுங்கும்
புனித மாதத்தில்
அன்னை
யாமினாதன் வயிற்றில்
அப்துல்லாஹ்தன் மகவாக
காஸிம்குல வம்சத்தில்
ஆமுல்பீல் வருடமதில்
அவனிக்கு வந்துதித்த
அண்ண லெம் மஹ்மூதே!

மனிதத் தன்மையற்று
மடமையில் வாழ்ந்தோரை
புனிதம் பெற்று வாழ்வு
ஈருலகிலும் ஏற்றம் பெற
இத்தரணி பெற்றெடுத்த
ஏந்தலெம் பெருமானே...
அத்தனை நபிகளுக்கும்
முத்திரை நபியாக

நித்திலம் போற்றும்
நற்குணப் போதகரே
நற்பேறு நாயகரே!

அநாதைகளை அரவணைத்து
விதவைகட்கு வாழ்வளித்து
துன்புற்றோர் துணை பெற்று
துயருற்றோர்
விடிவு பெற
இறைமறை ஏந்தி வந்த
இறுதி நபி நாயகமே
அருட்பிஎம்பே அண்ணலரே
அஹ்மதெனும் வல்லவரே
பொருட்சுவையில்
பொன்மொழிகள்
பொக்கிஷமாய் தந்தவரே!

இனியவராகி எங்கள்
இதயங்கள் நிறைவடைய
உதயமென வருகவென
மகிமை நிறைந்த மாநபியே
மதீனா வாழும் பேரொளியே
மறுமைப் பெருவெளியில்
மதியாய் பேரொளி தந்து
தருவாய் நிழல் தந்து
தாபரிக்க வருகவென
மெய்சோர்ந்து வேண்டுகிறேன்
மேன்மை மிகு நாயகமே!!!





# களவாடப்பட்ட என் காற்று!!!

எஸ். நுஹா

என்னிலிருந்து பிடுங்கி
எங்கென்றே தெரியாத
என் காற்று
இன்னமும்...
நான் விழித்திருக்கும் போதும்
உறங்கும் போதும்
கனவில் மாத்திரம்
வந்து வந்து செல்கிறது!

இதோ
நன்றாகப் பாருங்கள்
எனக்கு மூச்சுத் திணறுகிறது...
என்
காற்றைப் பிழிந்து சென்றவர்கள்
எங்கே வைத்திருக்கிறார்கள்?
சுவாசிக்கத் திணறுவதால்
என் உடம்பெல்லாம் பதறுகிறது!

எனதான சகல
உட்கட்டமைப்புகளும்
தொகுதிகளும்
சில்லிட்ட
சஞ்சலத்துடனாயினும்
இணங்கிக்கொண்டு தான்
இருக்கின்றன!

பல யுகங்களாக
நான் சுவாசத்தை
இழந்த விடயத்தை
அண்மையில் தான் அறிந்தேன்!
அதன் பிற்பாடு தான்
இந்த

திக்கல் திணறல்
எல்லாமே!


ஆனாலும்
நான்
இன்னும் பிணமல்ல...
சுவாசமற்ற
ஆனால்
உயிரும் உணர்வும்
அச்சாறாக்கப்பட்ட
உயிர்!

என் காற்றை
எனக்கு கொடுப்பீர்கள் என
நயமாய் கேட்டு
சலித்தாகி விட்டது!
காற்றின்றி
நான் பதங்கமாகப் பார்க்கும்
அபாயத்தை உணர்ந்தாயிற்று!

நிலவின் ஒளியைப் பிளந்து
சூரியனின் குழம்பை வடித்து
என் காற்றை
கைப்பற்றும்
தேடலையும்
ஆரம்பித்தாயிற்று!

நானாக என் வெற்றிடத்தை
நிரப்புகையில்
உங்கள் கொள்கலனுக்கும்
சேதம் வரலாம்!!!

# அழைப்பிதழற்ற விருந்தாளியாய்!



புசல்லாவை கணபதி

பொய்த்துப்போன
வானத்திலிருந்து விழும்
மழைத்துளியாய்
உன் ஓரப் பார்வை!

இன்றுவரை
உலக அதிசயத்திற்கு
விண்ணப்பித்திராத
உன் கலைந்த கேசம்!

என் கவனிப்புக்காகவே
எனக்கு பிடிக்காததை
அடிக்கடிச் செய்யும்
உன் நக கடிப்பு!

ஒரு அழகான புத்தகத்தை
திறக்காமலே படித்தது போல்
உனையே
பார்த்துக் கொண்டிருக்க
வைக்கும்
உன் அழகான மௌனம்!



உன் 'குட்மோர்னிங்'க்குப்
பிறகே விடிவதாய்த்
தோன்றுகின்ற
என் நாளாந்த பொழுது!

நீ விடுமுறை
எடுத்துக்கொள்கின்ற
போதெல்லாம்
ஒரு மனித
வெடிகுண்டைப்போல்
எனக்கான
இதய அவஸ்தைகள்!

இதெல்லாம் எதெற்கென
நான் இமை
மூடிக்கொள்கிற
போதெல்லாம்...

ஒரு அழைப்பிதழற்ற
விருந்தாளியைப்போல
நீ வந்து வதை செய்கின்ற
என் இராத்திரி கனவுகளை
நான் என்ன செய்வது???







## முயற்சி !

முழு மூச்சாய்
முடிவுதனில்
முகம் மலர
முனைவது!

## நிஜம் !


நினைவுகள்
பலவற்றோடு
நிழலாக
நின் அருகில் நிற்பது
நிஜம் தானா?

## தாய் !

தளிர்விட்டு வளர
பாலை தன்
உதிரத்திலிருந்து
பிரித்து எடுத்து
தாகம் தீர்த்தவள்!

**வெலிகம**
**ஸிஹ்னா நவாம்**

*தியத்தலாவ*
*ஸப்ராஸ்*



## நான்!


பெண்ணே!
நான் ஒன்றும்
கல் நெஞ்சக்காரனல்ல
அன்று நம் பிரிவின் போது
நீ வடித்த
கண்ணீர் துளிகள்
இன்றும் என் இதயத்தை
ஈரப்படுத்திக் கொண்டுதான்
இருக்கின்றன!!!

## கண்ணீர்!

பூக்களிலே
புத்தகம் செய்து
தேனிலே பேனை கொண்டு
சோலை எனும் கவிதைக்கு
பெண்மை எனும்
சொல்லெடுத்தேன்
ஆனால்
என் கண்கள்
எனும் பேனைக்கு
கண்ணீர் எனும் மை
தந்தவள் நீயல்லவா???

# ஹிஜாப் - சமூக சிக்கல்களைச் சமாளிக்க சில ஆலோசனைகள்

ஏ.ஜே.எம். பிறவ்ஸ்
சாய்ந்தமருது - 08



நீங்கள் ஹிஜாப் அணியத் தொடங்கியது முதல் பல்வேறு தரப்பிலிருந்து பலவகைப்பட்ட இடர்களையோ, இன்னல்களையோ, தொல்லைகளையோ சந்தித்து வந்திருக்கலாம். அவற்றை நளினமாக எதிர்கொள்வதுடன் சூழலையும் உங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ள சாதுரியமான அணுகுமுறை அவசியம். அவற்றில் சிலவற்றைப் பட்டியல் இட்டுள்ளோம். இதுவரை உங்கள் பாதையை எளிதாக்கித் தந்த இறைவன் இது போன்ற அணுகுமுறைகள் மூலம் உங்களுக்கு வெற்றியைத் தருவான் இன்ஷா அல்லாஹ்!

நீங்கள் புதிதாக ஹிஜாப் அணியத் தொடங்கியதைக் கண்ட உங்கள் நண்பர்களின் கேலி விமர்சனங்களைக் கண்டு நீங்கள் தன்னம்பிக்கையை இழப்பது போல் தோன்றுகிறதா?

1. ஹிஜாப் அணிதல் என்பது இறைவனின் புறத்திலிருந்து இஸ்லாமிய பெண்ணிற்கு இடப்பட்ட கட்டளை என்பதை நினைவு கூருங்கள். எந்த கட்டளைகளையும் விட இறையாணையைப் பின்பற்றுவது முக்கியத்துவம் வாய்ந்தது.

அதே நேரத்தில் ஹிஜாப் அணியத் தொடங்குவதன் மூலம் சந்திக்கும் சிரமங்களைப் பொறுத்துக்கொண்டு அமைதியுடன் இருங்கள். உண்மையான இறைநேசர்களுக்குச் சோதனை என்பது எப்போதும் உண்டு என்பதையும், எவர்கள் நம்முடைய வழியில் முயல்கின்றார்களோ நிச்சயமாக அவர்களை நம்முடைய நேரான





வழிகளில் நாம் செலுத்துவோம் (அல்குர்ஆன் 29:69) என்ற இறைவாக்கையும் மறந்துவிடாதீர்கள்.

2. மாற்று மதத்தவர்கள் மத்தியில் பிறரின் பார்வைக்கு நீங்கள் வித்தியாசமாகத் தெரிவதனால் வரும் விமர்சனங்களை அலட்சியம் செய்யுங்கள். ஹிஜாப் அணியத் துவங்கியதனால் குவியும் விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்துவிட்டீர்கள் எனில் உங்களைச் சுற்றி எவர் எது பேசினாலும் அது உங்களின் புதிய தோற்றம் பற்றியே பேசுவதாக எண்ணத் தொடங்கிவிடுவீர்கள். மனதளவில் குறை ஏற்பட்டு உடல் ரீதியாகவும் அது பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

3. புதிய பரிமாணத்துடன் இவ்வுலகின் கண்களுக்கு நீங்கள் தோற்றமளித்தாலும் இறைவனின் கட்டளையை செயல்படுத்துவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நீங்கள் தீர்மானித்துக்கொள்ளுங்கள். இறைவனைத் திருப்திப்படுத்துகின்ற ஒரு புனிதமான செயலைச் செய்கிறோம் என்ற உள்ளுணர்வோடு புத்துணர்ச்சியும் தன்னம்பிக்கையும் மேலிட பிறர் மத்தியில் நடப்பதை உணர்வீர்கள்.

4. தரமிழந்து விமர்சிப்பவர்களைக் கண்டு புன்முறுவல் பூத்தவண்ணம் நகர்ந்துவிடுங்கள். தடுமாற்றமில்லாத உங்களின் அமைதியே வார்த்தைகளால் உங்களைத் தாக்குபவர்களுக்கு பதிலடியாக அமையும். உங்களுக்கு ஊக்கமளிக்காத சூழல்களைச் சமாளிப்பதற்கு ஏற்ற சக்தியை வழங்க இறைவனிடம் உதவி கோருங்கள்.

**ஹிஜாப் அணிந்து நீங்கள் பள்ளிக்கோ அல்லது கல்லூரிக்கோ வருவதை அதன் நிர்வாகம் தடை செய்து விட்டால் என்ன செய்வது?**

நீங்கள் வசிக்கும் பகுதியில் இது போன்ற பிரச்சனைகளை சந்திக்க நேரிட்டால், உங்களைப் போன்ற சிக்கலைச் சந்தித்த பிற சகோதரிகளையும் ஒன்று சேர்த்து பள்ளிக்கல்லூரி நிர்வாகம்

விதித்துள்ள தடைகளை நீக்குவது பற்றிய சிந்தனை அழுத்தத்தை பொது மக்களிடம் குறிப்பாக உங்கள் பள்ளிக்கல்லூரி மாணவிகளிடத்தில் ஏற்படுத்துங்கள்.

ஹிஜாப் உடையணிந்தவர்கள் மீதான அநீதியான பள்ளிகல்லூரியின் இத்தடையை நீக்கக் கோரி உள்நாட்டு அரசியலமைப்பு விதிகளின் அடிப்படையில், சட்டப்பூர்வமாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பதன் மூலமும் ஆளும் அரசாங்கத்தின் மீது அழுத்தம் ஏற்பட முயற்சி செய்யுங்கள்.

1. கூடுமானவரையில் முயற்சித்து உலக ஊடகங்களுக்கு உங்கள் முயற்சிகளைத் தெரியப்படுத்துங்கள்.

2. உங்களின் கருத்துக்களை ஆதரிக்கும் நபர்களை ஒன்று சேர்த்துக்கொள்ளுங்கள். மனித உரிமைகளுக்காகக் கொடுக்கப்படும் உங்கள் குரல் வெகு எளிதில் வெளி உலகிற்குச் சென்றடைய இது உதவும்.

3. சத்தியத்திற்காகவும் நீதிக்காகவும் போராடும் இப்போராட்டத்தில் ஏற்படும் இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் தாங்கும் சக்தியையும், இதற்கான வெற்றியையும் வேண்டி இறைவனிடத்தில் பிரார்த்தியுங்கள்.

**நீங்கள் வசிக்கும் நாட்டில் சட்ட ரீதியாக விதிக்கப்பட்டுள்ள ஹிஜாப் தடைகளுக்கு எதிராகப் போராடத் துணிந்து விட்டீர்கள் எனில் அடுத்து என்ன செய்வது?**

1. உங்களின் ஜனநாயக உரிமைகளைப் பெற உரிய நபர்களைச் சந்தித்துப் பேசுவதற்கு ஆயத்தமாகுங்கள்.
2. உங்களைச் சுற்றியுள்ள குறுகிய வட்டத்திலிருந்து வெளியே வாருங்கள். உங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை ஒரு





தனிமனிதனுக்கானது இல்லை மாறாக பொதுவானது என்பதை அனைத்து சமுதாயத்தினரும் அறிந்து கொள்ள வழி வகை செய்யுங்கள். தனிமனித சுதந்திரத்தையும், மனித நேயத்தையும் விரும்பக்கூடிய சட்டத்தை மதிக்கும் குடிமக்கள் உங்களுடன் துணைக்கு வருவார்கள்.

3. உங்கள் பகுதி ஜமாஅத்தார்களின் உதவியை நாடுங்கள்.

4. அமைதியை விரும்பும் மக்களோடு உதவிக்கரம் சேருங்கள். இஸ்லாத்தை சுதந்திரமாக பின்பற்ற விரும்புவர்கள் படும் இன்னல்களை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

5. உங்கள் போராட்டத்தை ஊடகங்கள் வாயிலாகவே வெளியுலகிற்கு அறிவிப்பதை வாடிக்கையாக்குங்கள்.

6. இறுதியாக, சத்தியத்தையும் நீதியையும் நிலை நாட்டிடும் உங்களின் இத்தூய அறப்போராட்டத்தில் ஏற்படும் துன்பங்களில் இருந்து உங்களைக் காத்திட இறைவனை மட்டுமே நம்புங்கள். சத்தியத்தின் பக்கம் இருப்பவர்களுக்கு என்றுமே தோல்வியில்லை என்பதை மனதில் திரும்பத் திரும்ப கூறிக் கொள்ளுங்கள்.

**நீங்கள் பணிபுரியும் இடத்தில் ஹிஜாப் அணிவதை உங்களின் மேலதிகாரி தடை செய்தால் என்ன செய்வது?**

1. அல்லாஹ்விற்குக் கீழ்படியாத எவருக்கும் கீழ்படியத் தேவையில்லை என்ற நபிமொழிக்கேற்ப இறைவனின் ஆணைக்கு எதிராக உத்தரவிடும் உங்கள் மேலதிகாரிக்கு நீங்கள் கீழ்பணியத் தேவையில்லை.
2. ஒரு பெண் தான் விரும்பி ஏற்றுள்ள இஸ்லாமியக் கோட்பாடுகள் மற்றும் தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையில் உங்கள் பணியிடங்களில் ஹிஜாப் அணிவதற்கு உங்களுக்கு முழு உரிமை

உள்ளது. சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் மனித உரிமை சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இது போன்ற உரிமைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. உங்கள் மேலதிகாரி நீங்கள் ஹிஜாப் அணிவதை விட்டும் உங்களைத் தடுக்கிறார் என்றால் மேற்கண்ட சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் அவர் ஒரு குற்றவாளி என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

3. எனவே ஒரு முஸ்லிம் பெண்மணியாக, இஸ்லாமிய ஒழுங்குகளை நீங்கள் விட்டுக்கொடுக்க வேண்டாம். உங்களால் தனித்து இது போன்ற சூழலை எதிர்கொள்ள முடியாத பட்சத்தில், நீங்கள் வசிக்கும் பகுதியில் இஸ்லாமிய வக்ஃப் அமைப்பை அணுகி அவர்களிடமிருந்து கடிதம் பெற்று அதனை உங்கள் மேலதிகாரிக்கு சட்டப்பூர்வமாக ஓர் எச்சரிக்கை விடுப்பதன் மூலம் அவரின் தவறை உணர்த்தச் செய்யலாம்.

**உங்கள் பெற்றோரே நீங்கள் ஹிஜாப் அணிவதற்குத் தடையாக இருக்கும் சூழலில் என்ன செய்வது?**

1. ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ளுங்கள். உங்கள் பெற்றோர் உங்களிடம் எவ்வளவுதான் கடுமையாக நடந்து கொண்டாலும், அழகிய இஸ்லாமிய அடிப்படையின்படி, நீங்கள் திரும்ப அவர்களிடம் கோபமாகவும் கடினமாகவும் நடந்து கொள்ள உங்களுக்கு அனுமதியில்லை. மாறாக, அன்பாகவும் அமைதியாகவும் அவர்களிடம் பேசுங்கள்.

2. உங்கள் மனதைப் புண்படுத்தும்படியான வார்த்தைகளை உங்கள் பெற்றோர் பேசியிருந்தால் பொறுத்துக்கொள்ளுங்கள்.
இன்னும் அர்ரஹ்மானுடைய அடியார்கள் (யாரென்றால்) அவர்கள்தாம் பூமியில் பணிவுடன் நடப்பவர்கள். மூடர்கள் அவர்களுடன் பேசி(வாதா)ட முற்பட்டால் ஸலாம் (சாந்தியுண்டாகட்டும் என்று) சொல்லி (விலகிப் போய்) விடுவார்கள். (அல்-குர்ஆன் 25:63)





3. மறுமை நாளில் இறைவனை சந்திப்பவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிடாமல், உங்கள் நோக்கத்தை சத்திய சிந்தனைகளைக் கொண்டு வலுப்படுத்துங்கள்.

4. இறைவனை தியானிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் மனச் சுமைகளைக் குறைப்பதுடன், சந்தோஷத்தையும் கூடவே அமைதியையும் இது தர வல்லது.

5. இறைத்தூதர் நபி (ஸல்) சந்தித்த போராட்டங்களையும், தியாகங்களையும் தொடர்ந்து நினைவு கூருங்கள். சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையே நடைபெறும் போராட்டங்களை விவரிக்கும் இறைமறையின் சூரா யூஸுப் அத்தியாயத்தை அடிக்கடி ஓதி நினைவு கூர்வது நன்மை பயக்கும்.

6. உங்கள் பெற்றோருடன் மிக மென்மையாகப் பேசி அவர்களின் தவறான எண்ண ஓட்டத்தை மாற்ற முயலுங்கள். அதற்கு அவர்கள் செவி சாய்க்காமல் போகும் பட்சத்தில் வல்ல ரஹ்மானிடம் முறையிட்டு அவர்களின் மனதை மாற்றிட வேண்டுங்கள்.

7. ஹிஜாப் அணிந்த நிலையில் கூடுமான வரையில் உங்கள் நடத்தை மற்றும் செயல்பாடுகளில் கண்ணியத்தைப் பேணி நடக்க முயற்சியுங்கள். ஹிஜாப் அணிந்தவர்களை அணியாதவர்கள் முதலில் பார்க்கும் பார்வை அவர்களின் கண்ணியமான நடத்தையையும் தோற்றத்தையுமே! அது போன்ற ஒன்று உங்கள் பெற்றோரிடம் மனமாற்றத்தைக் கொண்டுவரலாம். அவ்வாறு நடவாத சூழலிலும் துவண்டு விடாதீர்கள். வருத்தப்படாதீர்கள்.

8. மேற்கத்திய கலாச்சாரத்தைத் தவிர்த்து, உலகமெங்கும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் எதிர்நோக்கும் ஒரு முக்கிய விஷயம் கீழ்ப்படிதல் என்பதே! இறைவனுக்கு மாறு செய்தல் எனும் ஒரு

விஷயத்தில் பெற்றோருக்குக் கீழ்படிவதைத் தவிர்த்து மற்ற அனைத்து விஷயங்களிலும் அவர்களுடன் கீழ்ப்படிந்து நடக்க முயற்சி செய்யுங்கள்.

9. கூடுமானவரையில் உங்கள் பெற்றோருடன் நெருக்கமாக இருக்க முயலுங்கள். குறிப்பாக உங்கள் தாயுடன் பரஸ்பர உறவுகளை நெருக்கப்படுத்திக் கொள்ளுங்கள். நினைவில் வையுங்கள். உலகில் பணத்தால் சாதிக்க முடியாத விஷயங்களை அன்பினால் வெகு சுலபமாக சாதித்து விடலாம்.

10. இறுதியாக, ஹிஜாப் அணிவதை மனதார ஏற்கும் விதத்தில் அவர்களை சமயோசிதமாக அணுகுங்கள். அதை அழகிய முறையில் ஒரு மார்க்க சொற்பொழிவைக் கேட்கச் செய்வதன் மூலமாகவோ, அல்லது ஹிஜாபின் மாண்புகளை எளிமையாக விவரிக்கும் புத்தகத்தைக் கொண்டோ சாதிக்க இயலும். □□□

கடந்த 24 வருடங்களாக ஹஜ், உம்ரா சேவையில்
தன்னை அர்ப்பணித்துள்ள நியாஸி ட்ரவல்ஸ்,
பூங்காவனம் சிறப்புற வளர வாழ்த்துகிறது.

NIYAZY
TRAVELS (PVT) LTD.

Moulavi M. Niyazfaleel J.P
Chairman & Managing Director

50 / 2 / 2, Colombo Plaza,
Galle Road, Colombo 06.
Tel : 011 5231178
011 5231179
Mobile : 077 9682512
071 7351447

Air Line, Ticketing, Hajj & Umrah Operators





# வரம் தருவாயா?

ஏ. ஆமிரா - புத்தளம்

நண்பா..
நட்பெனும் நயனத்துக்குள்
என்னை கருவுரச் செய்தவன்
நீ!

என் அன்புக்கு பெயர்
காதலல்ல!

அது
கலைகளில் எழுதப்படாதது...
மறைகளில் கூறப்படாதது...
எம் இதயங்களில் மட்டும்
பொறிக்கப்பட்டது!

விண்ணப்பங்களும்
வேண்டுகோளும்
நட்பில் எதற்கு?
எப்போதோ தந்து விட்டேனே..
நட்பின் அகராதியை!

உன் கனவுகளின் ரணத்துக்கு
உயிரூட்டுகிறேன்..
எதிர்பார்ப்புகள் ஏதுமின்றி!

கடைசியாய் ஒன்று...
உன் தோழியாக மட்டுமாகும்
வரம் வேண்டும்
தருவாயா???

# ஏமாற்றம்

நந்தவனத்துக்குள்
ஜோடியாக போகலாம்
என்றாய்..
ஆனால்
பாலைவன விலாசத்தை
கண்களில் காட்டினாய்!

நிலவுக்குப் போய்
நீந்தி விளையாடுவோம்
என்றாய்...
ஆனால்
சூரிய சூட்டின்
வெப்பத்தைத் தான்
சுவாசிக்க
வைத்தாய்!

கண்ணுக்குள்
வைத்து
காப்பேன்
என்றாய்...
ஆனால்
கல்லறையைத்
தான்
பரிசாக்கிச்
சென்றாய்!

**தர்காநகர் நிஸ்வா ஸலாம்**

with Best Compliments From...
Ameer Niyas (Proprietor)

AMEER LIGHT SHOP

SWANKI ®CFL -Bulb -Agent

Dealers in Imported Lamps, Shades, Wall Brackets
& Electrical Appliances

Wholesale & Retail

Head Office
No. 220, Galle Road, Dehiwala, Sri Lanka.
Tel: 0112-721215, Mob: 0777-723839, Fax: 0112-738730

Branch
Light House - No.96, 1st Cross Street, Colombo -11.

with Best Compliments From...
Al-Haj M.Z.M. Fassy

Fine Plastic & Print

Wedding Cards, Offset & Screen Printing,
Digital Printing, Plastic Boards, Stainless Steel, Letter-

58, CENTRAL ROAD,
DHARGA TOWN.
MOBILE- 077-6775620

38, ZAVIA LANE,
MAHAGODA,
BERUWELA.





## நரகத்து உறவு!

உன்னோடு
உறவாடிய நினைவுகள்
நரகத்தில் நான் வாழ்ந்த
பதிவுகள்!

விருந்தினர் விடுதியொன்றில்
என்
விழிகளில் பட்டாய் நீ!

என்னை அறியமலேயே
என் மனம்
உன் மீது பறிபோனது!

என் பார்வையில்
எனக்கு நீ
சொர்க்கமாய் தெரிந்தாய்!
நீயில்லா நாட்கள்
நரகமாய் ஆனது!

இதயத்தில் குடியிருந்த
எண்ணற்ற துக்கங்கள்
உன் உறவின் பின்
ஓடிப்போனது உண்மை தான்!

நீ
எனக்குள் இருக்கையில்
எல்லாமே மறந்திருப்பேன்!

உன்னோடு உறவாடியதால்
தான்
ஊரும் வெறுத்தது
உறவும் வெறுத்தது!

நானுனை வெறுத்தேனா?
நீ வேண்டும் என்பதற்காய்
இழந்தது எத்தனை?

போதும்..
உன் வேசம் உணர்ந்தேன்
கொஞ்சம் கொஞ்சமாய்
கொல்லும்
விசமென்றறிந்தேன்.. இனியும்
உனை நம்பி
ஏமாற மாட்டேன்!

என் மனம் நாடாது
இனியும் உன் உறவை..
பொல்லாத மதுபானமே!!!

யோ. புரட்சி




## குழந்தை !

நிரந்தர நியமனம் பெறாத
ஒரு தற்காலிக தெய்வம்

யோ. புரட்சி




# இரவினில் பேசுகிறேன் !



- மன்னார் அமுதன்

ஒன்றாய் நூறாய்ப்
பல்கிப் பெருகி
புதிய கட்டுரையாய்
எனக்கே எதிரொலிக்கும்
பகலில் பேசிய
ஓரிரு வார்த்தைகளும்..

மானிட அரிதார
மாக்களின் சர்ச்சையில்
மௌன விரதமாய்க்
கழியுமென் பகல்கள்

தோழிக்கும், தோழனுக்கும்
துரோகிக்கும், காதலிக்குமாய்
எத்தனைமுறை
உரைத்துக் காட்டுவேன்
நான் அவனே தானென!

பகல்களில் செத்து
உறக்கத்தில் உயிப்பதற்கே
இரவினை நாடுகின்றேன்!

எண்ணச் சிதறல்கள்
ஒலியாய் வெடிக்க
விழித்துக் கொள்கின்றன
என் இரவுகள்!

எங்கோ பார்த்த முகத்தோடும்
அதே கனிவோடும்
அதட்டல் தொனியோடும்..

வெளிச்சத்தில் வீசிய
வார்த்தைகள் எல்லாம்
இருட்டில் மோதி
அவளிதழில் எதிரொலிக்க
ஏகாந்தத்தில்
சுற்றித் திரிகிறோம்!

உணர்ந்த ஸ்பரிசமாய்
அவளணைக்கையில்
இராக்கோழியை சேவல்
எழுப்பும்!!!





# இறையில்லத்தின் முறையீடு!



ரமழான் முழுவதும் நின்று வணங்கி
எனை அலங்கரித்தவர்களே...
எங்கே நகர்கின்றது உங்கள் பாதம்
எனை தனியாய் விட்டு விட்டு?

ஆண்டவனை வணங்கி
அருள் பெற்று
ஆன்மீகத்தின் உச்சம்
பார்த்த பின்னும்
பாவ சக்தி நோக்கி
உங்கள் பாதங்கள் நகரலாமா?

பட்டினி கிடந்து பாவத்தை
வெறுத்து
பக்குவமும் பெற்றவர்களே
மீண்டும் மறையை மறந்து
உலகத்துக்கு இரையாகலாமா?

பளிங்குக் கற்களிட்டு வண்ணமாய்
வர்ணம் பூசி
எனை அழகு படுத்தினீர்கள்...
தொழுகைக்கு மக்களை
அணிதிரளச் செய்தீரா?

மானக்கேடை தடுக்கும்
மகத்தான கேடயத்தை
மறந்து நிற்றல் ஆகுமா?

பணம், பெண், உலக
மோகத்தில் முற்றி
படைத்தவனை
பணிய உங்கள் நெற்றி
மறுப்பதேன்?

ஏக வல்லவனை
ஏக மனதுடன் ஏற்று
தினம் வணங்கினால்
தலை குனிவில்லை...
தலையாய கடமையை
தவறினால் என்றும்
தலை நிமிர்வில்லை!

வீணான வேடிக்கையிலும்
போலி மாயங்களுக்கும்
மயங்கி விடாமல்
வெற்றிக்கு வாருங்கள்...
தொழுகைக்கு வாருங்கள்...
தூக்கத்தை விட
தொழுகை சிறந்தது!!!

இளைய அகத்திமுறிப்பான்

## நல்ல மனம் வேண்டும்!



நல்ல மனம் வேண்டும்
நாளும் பழகிக் கழிப்பதற்கு -
வாழ்வு
தேனாய் இனித்திட வேண்டும்
தேகம் என்றும் குளிர்வதற்கு!

நேசம் வைத்துப் பழகிடவே
நாளும் தோறும்
தவிக்கின்றேன்..
நட்பை என்றும் நாடுகிறேன்
நன்மைகள் அதனால்
கிடைத்திடவே!

தளரா நெஞ்சம் தான்
கொண்டு
இருளில் நானும் வாழுகிறேன்..
வாழ்வே நாடக மேடையதால்
வேஷம் போட்டு
நடிக்கின்றேன்!

அன்பு நெஞ்சம்
கொண்டோரை
அகம் மகிழ்ந்திட
தேடுகிறேன்..
அற்ப வாழ்வு உலகினிலே
அல்லும் பகலும் வாடுகிறேன்!

எந்தன் பாதி வாழ்க்கையினை
ஏக்கத்தோடு கழித்திட்டேன்..
வேண்டாம் இனியும் இவ்வாழ்வு
வேண்டும் எனக்கு நல்வாழ்வு!!

**கலைச்சிட்டு பாயிஸா கைஸ்**
**சீனங்கோட்டை**

with Best Compliments From...

POOBALASINGAM BOOK DEPOT

IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS
STATIONERS AND NEWS AGENTS

202, Sea Street, Colombo - 11, Sri Lanka
Tel - 2422321, 2435713 Fax- 2337313
E-mail- pbdho@sltnet.lk

Branches

340, Sea Street,
Colombo- 11,
Sri Lanka.
Tel: 2395665


309A-2/3,Galle Road,
Colombo 06,
Sri Lanka.
Tel: 4515775, 2504266

4A, Hospital Road,
Jaffna.
Tel: 021-2226693






## நேரான பாதைக்குள் பாதங்களை போக விடு!



நயனங்களை மூடிக்கொண்டால் எங்கும் இருட்டு தான்
சயனத்தில் நீ இருந்தால் சோம்பல் தான் பரிசாகும்.
நாடிச் செல்லாமல் நான்கு சுவர்களுக்குள்
நீடித்தால் உன் சயனம் ஜெயம் தருமோ எண்ணிப்பார்.
நிமலனையும் மறந்து விட்டாய்... நித்திரையில் சுகம் உனக்கு.
அமலனின் அருள் கருணை அனைத்தையும் உள்வாங்கு.
நீள்விசும்பில் உதித்து விடும் ஆதவனையொத்தவன் நீ
கீழ்மட்டக் கேண்மையினால் பாழ்பட்டுப் போகாதே.
நுண்கலைகள் கற்றவரின் உன்னதங்கள் அறிந்தவன் நீ
பொன் விளையும் பூமிக்குள் சஞ்சாரம் செய்கின்றார்.
நூதன சாலைக்குள் காட்சிகளைக் கண்டவன் நீ
சீதனமாய்க் கல்வியினால் சாதனைகள் ஏது செய்தாய்?
நெறியாள்கை செய்ய வந்தால் முறைதவறி பேசுகிறாய்.
வெறியாட்டம் ஆடுகிறாய் - அறிவிழந்து பேசுகிறாய்.
நேரான பாதைக்குள் பாதங்களைப் போகவிடு.
பாராளும் பதவிக்கும் நீ வருவாய் ஒருநாளில்.
நையாண்டி செய்தவரும் பாய்ந்தோடி வருவாரே.
வெய்யோனின் பிரபையினால் இருளகலும் வையகத்தில்
நொண்டிக் குதிரையினால் பாய்ந்தோட முடியாது.
உண்டிக்கு வழியில்லை என்றனர் விடையுண்டா யோசி.
நோகாதே மற்றவரை.. சாகும் வரை உனக்கு
ஆகாது அயகீர்த்தி.. அவனியிலே முதல்வன் நீ.
ஞாலத்தில் முதல்வனாம் இறைவனுடன் சங்கமித்தால்
காலமெல்லாம் பேரின்பம் இறையருளால் நிச்சயமே!!!

மருதமுனை
புன்னகை வேந்தன்

# இசையும் பாடலும்




**கிளியனூர் இஸ்மத்**

இசை ஜீவன்களை
இணங்க வைத்து
அசைக்க வைக்கும் ஆதி..
குன் என்ற ஓசையில் தான்
இந்த உலகத்தின் ஜோதி!

ஓசையில் தான்
மனிதனுக்கு பிறந்தது ஆசை..
ஆசையினால் மனிதன்
மறந்து போனான்
தன் சுய ஓசை!

''ஹூ'' என்ற ஓசையின்
முடிவே
''ஓம்'' என்ற நாதம்..
சுரங்களை சுரக்க வைக்கும்
இவைகளில் இல்லை பேதம்!



பிறப்பு இசைத்தால்
தாய்க்கு ஆதாரம்..
பூக்கள் இசைத்தால்
தேனுண்ணிக்கு ஆகாரம்..
பூகம்பம் இசைத்தால்
மனிதனுக்கு சேதாரம்!

காற்றின் இசையினை யாரும்
கற்றுக்கொள்வதில்லை..
கடலின் இசையை நாம்
கவனிப்பதில்லை..
இயற்கையின் இசையை நாம்
இயற்றுவதில்லை..
பசியின் இசையயை நாம்
உணர்வதில்லை!

இசை
மனிதனை
வாழச்செய்கிறது..
மனிதனுக்குள் வாழவும்
செய்கிறது!!!





# சமூகத்தில் வேரூன்றியிருக்கும் ஆணாதிக்க அதிகார அம்சங்கள்

**சந்திரகாந்தா முருகானந்தன்**

பெண்ணிய இலக்குகளை நோக்கிய பயணம் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில், பெண்களுக்கு எதிராக சமூகத்தில் நடைமுறையிலிருக்கும் பாதகமான விடயங்கள் பலவும் அடையாளம் காணப்பட்டு வருகின்றமை ஓர் ஆரோக்கியமான விடயமாகும். எமது சமூக கட்டமைப்புகளில் மரபு ரீதியாக தொடர்ந்து வரும் பாரம்பரியங்களில், பெண்களின் இருப்பையும், உயர்வையும், சம சுதந்திரமான வாழ்வையும் மறுத்து நிற்கும் அம்சங்கள் பலவும் அடங்கியுள்ளன. பெண் சமபிரஜை போலன்றி ஆணை விட குறைந்தவளாக கட்டமைக்கப்படுவதற்கு ஏற்றவாறாக இவ்வம்சங்கள் காலம் காலமாக தொடர்ந்து வருகின்றன. எமது பண்பாட்டு முறைகளிலும் இந்நிலையே உள்ளது. எனினும் இச்செயற்பாடுகள் யாவும் வெளியே தோன்றாதவாறு, இலகுவில் இனம் காணாதவாறு வடிவமைக்கப்பட்டுள்ளன.

மேலோட்டமாகப் பார்த்தால் இவ்வாறான அம்சங்கள் பெண்ணுக்கு சார்பானது போல தோற்றமளிக்கும். ஆனால் நுணுகி நோக்கினால் தான் பெண்களுக்கு எதிராக இதிலுள்ள அம்சங்கள் தோன்றும். பெண்கள் இவ்வாறு ஆழமாக சிந்திக்கா வண்ணம் பலவித மாயைகளால் அவள் சூழப்பட்டுள்ளாள். பெண்ணழகு, கற்பு, பணிவு, தியாகம் முதலான போர்வைகள் பெண்ணுடைய உண்மை நிலையை அவள் உணராவண்ணம் திரையிட்டிருக்கின்றன.

பெண் இப்படித்தான் வாழ வேண்டும், இதுவே ஒழுக்கம் என உணருமாப் போன்ற வளர்ப்பு முறை தொட்டில் பராயத்திலேயே தொடங்கப்படுவதனால் பெண்ணும் அதுவே தனது வாழ்க்கை முறை என ஒழுகுகிறாள். இச்சமூகத்தின் ஆணாதிக்கம் தன்னை வாழ்வு நிலையில் வைத்திருப்பதை பெண்களில் பலர் உணராமல் இருப்பதற்கும் இதுவே காரணம். பெண்ணியம் தனது இலக்கை நோக்கிய பயணத்தில் முன்னேற வேண்டுமாயின் பெண்ணியம் பற்றிய விழிப்பு எல்லா மட்டப் பெண்களுக்கும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

முதலாவது அம்சமாக சமூகத்தில் வேரூன்றியிருக்கும் அதிகார முறைகளை பெண்கள் இனம் காண வேண்டும். எமது பண்பாட்டு அம்சங்களில் பெண்ணுக்கு சமமான இடம் இல்லை என்பதையும் எதிரான அம்சங்கள் நிறைந்து இருக்கிறது என்பதையும் உணர்த்த வேண்டும்.

அழகு என் பிரமை பெண்ணை உயர்த்துவதற்கு அன்றி, அடிமைப்படுத்தவே உதவுகிறது என்பதையும், தியாகம் என்பது பெண்களுக்கு இருக்க வேண்டும் என்ற நிலைப்பாடு பக்கச்சார்பானது என்பதையும் உணர்த்த வேண்டும்.

பெண்ணுடல் பணிவுடலாகவும், பாலியல் சாதனமாகவும் மட்டுமே நோக்கப்படுகிற ஆணாதிக்க நிலையினை பெண்கள் புரிந்து கொண்டால் தான், பெண்ணியப் படிகளில் ஏற முடியும். கற்பு என்பது கூட மாயையாகவே உள்ளது. ஒருதலைப்பட்டமானதும், நியாயமற்றதும், சமத்துவமற்றதுமான பார்வைகள் பெண்ணையும், பெண்ணிய மேம்பாட்டையும் பின் தள்ளுகிறது. பெண்ணின் விசையான முன்னேற்றத்திற்கு இசைவாகாமல் வசைகள் பலவற்றை பெண்கள் எதிர்கொள்கின்றனர்.

எமது பண்பாட்டு அம்சங்களிலுள்ள பாரபட்சம் நீக்கப்பட்டு அசமத்துவ நிலை மாற்றம் கண்டு புதிய மாற்றத்திற்கான வழி பிறக்க வேண்டும். இது உடனே அசாத்தியமாக தோன்றினும், இவ் இலக்கை எட்ட முடியும் என்ற நோக்குடன், நம்பிக்கையுடன் பெண்ணியவாதிகள் செயற்பட வேண்டும். பெண்ணியப்போரட்டம் என்பது ஆயுதப்போராட்டமல்ல. தனிநபர்களின் போராட்டமுமல்ல. பெண்வர்க்கத்தினரின் போராட்டம்.

இன்னும் சரியாகச் சொல்வதானால் ஒட்டுமொத்த சமூகத்தினது போராட்டமாகும். பெண்ணியம் மேம்பட்டால் முழுச்சமூகமும் மேம்படும். பெண்ணியத்தின் வெற்றி ஒரு போதும் ஆணை சிறுமையடைய வைக்காது. சமமான ஒரு நிலையையே ஏற்படுத்தும். பெண்ணியவாதிகள் ஆண்வர்க்கத்தினருக்கு எதிரானவர்கள் அல்லர். ஆணாதிக்க முறைகளுக்கே எதிரானவர்கள். இன்று இந்த போராட்டத்தில் ஆண்களும் கைகோர்த்து நிற்பது அதனால் தான்!!!





# மல்லிகை!

மல்லிகைப் பூக்களின்
உள்ளத்தில் வாழுவோம்...
மல்லிகை தென்றலின்
செல்லத்தில் ஆடுவோம்!

மல்லிகை செடிகளின்
முற்றத்தைக் கூட்டுவோம்...
மல்லிகைப் பந்தலில்
கற்றதை எழுதுவோம்!

மல்லிகை இதழ்களில்
மொழியை தீட்டுவோம்...
மல்லிகை விழிகளில்
இமையைக் காட்டுவோம்!

மல்லிகை செடிகளை
கண்களில் ஒற்றுவோம்...
மல்லிகை வண்டுகளை
மனங்களில் சுவாசிப்போம்!

மல்லிகை மாலைகளை
இறைவனுக்கு கொடுப்போம்
மல்லிகை வெயிலை
ஞாயிறிடம் கேட்போம்!

**மணற்றி ஞாயிறு**
**யாழ்ப்பாணம்**

# தமிழ் பாட்டு!

**நல்லூர் – யாழினி**

*தமிழின் இசையில்*
*தமிழ் பாட்டு...*
*அமிழ்தின் வரியில்*
*தமிழ் பாட்டு!*

*அணுவின் உருவில்*
*தமிழ் பாட்டு...*
*அறிவின் வடிவில்*
*தமிழ் பாட்டு!*

*துணிவின் துணையில்*
*தமிழ் பாட்டு...*
*பிறையின் பொழிவில்*
*தமிழ் பாட்டு!*

*மனிதம் வேண்டும்*
*தமிழ் பாட்டு...*
*மக்கள் வாழ்த்தும்*
*தமிழ் பாட்டு!*

*புனிதம் தேடும்*
*தமிழ் பாட்டு...*
*பூக்கள் சுடும்*
*தமிழ் பாட்டு!*

# நினைவுத்தடங்கள்!

## ச.முருகானந்தன்

இனி என் வாழ்வில்
இவள்
துணை வரப்போவதில்லை..
இது தெரிந்த பின்னரும்
இதயத்தின் அறைகளில்
தேங்கியிருக்கிறது
அவள் நினைவுகளும்
பிரிவின் கண்ணீர் துளிகளும்!

ஒற்றைப்புள்ளியில் ஒன்றி
ஒன்றென
மனம் கலங்தவர்களை
பிரித்து விளையாடி
சாதித்து
சந்தோசம் கொண்டாடும்
பெற்றோர்களுக்குப்
புரிவதில்லை
பிள்ளைகளின் சோகம்!

காலக் கரைப்பில் தணியும்
பிரிவின் சோகத்தடங்களை
கரையில் ஒதுக்கி விட்டு
கரம் பிடிக்கும்
புதிய உறவுகள்!

ஆனாலும் இப்போது அவளை
இடைக்கிடை நினைத்தபடி!!!

பாணகமுவ
ரபாய்தீன்



# பெண்ணே நீ!

பாத்திமா நாயகியின்
பாதையிலே
வந்த பெண்ணே...
பர்தா அணிந்து
பார்வை தாழ்த்தி
பக்குவமாயிருக்க
வேண்டாமா?

அனுதினமும் ஐவேளை
அல்லாஹ்வை தொழாமல்
தொலைக்காட்சி முன்
தொற்றிக் கொள்ளலாமா?
அல்குர்ஆனை ஓதவேண்டிய
நீ சின்னத்திரையில்
சீரியல் பார்ப்பது தகுமா?

நபிமார்களைப் பற்றித்
தெரியாத உனக்கு..
நடிகர்களின் விபரங்கள்
எதற்கு?
அண்ணலார்
அடிச்சுவட்டை பின்பற்றாமல்
அந்நிய கலாச்சாரத்தில்
மூழ்குவது சரியோ?

எப்படியும் வாழலாம்
என்பது வாழ்க்கையல்ல
இதை நீ உணர்வது
எப்போது???





# அந்தகார நிலவு!

பொய்யே...
பொய்யாகிப் போனதேனோ?
கண்ணிறைந்த கனவுகள்
காத்திருந்த இரவுகள்
காணாமற் போன பகல்கள்
பொய்யாகிப் போனதேனோ?

பழைய ஞாபகங்களை
வறுத்தெடுத்தேன்
ஈரத்தை மட்டும்
உலர்த்த முடியவில்லை
காயங்கள்
வடித்த கண்ணீர்
இன்னும் ஆறவில்லை!

விழுந்த புன்னகையால்
மலர்ந்த முகம்
மானம் போர்த்திய நாணம்
மீட்டிப்பார்க்கிறேன்
சுகத்தை விட
சோகம் பிரசவிக்கிறது!

உயிருக்குள் ஊறிப்போன
உணர்வுகள்...
உணர்வுகளுக்குள் ஊற்றெடுத்த
நினைவுகள்
நீராகிப் போனதேனோ?

உறவுகளின் கருவறைகள்
கதறியழும் வேளை
கானலைக் காட்டி
கனவுகளில் மட்டும்
வாழ வழி காட்டுவதேன்???

– பேருவளை
ரபீக் மொஹிடீன்

♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥ ♥

# சுழியோடும் இதயம்!


குறிஞ்சி நிலா

நின்னை நான் நினைத்தது
நீ செய்த பிழையில்லை....
உன் மனசை நாடினேனே
எனக்குத்தான் தலையில்லை!

அகம் கேட்டுப் பழகினேன்–உடல்
சுகம் ஒன்றும் தேவையில்லை...
உன் அலட்சியங்களைத் தாங்கிட
என் உள்ளமோ பாலையில்லை!

உன் மனசுக்குள் வந்த நான்
இடையிலேயே போகின்றேன்...
மீதியுள்ள வாழ்நாளில்
தனியாவே சாகின்றேன்!

ஈரமுள்ள நெஞ்சுக்குத் தான்
இதயத்தில் வலியெடுக்கும்...
அன்பு நதியில் நீச்சலடித்தால்
இறக்கும் வரை சுழியடிக்கும்!!!



என். சந்திரசேகரன்
இறத்தோட்டை

## வரலாறு வாழ்த்தும்!

பேனாக்களே
தூரிகைகளே...
உங்களுக்கோர்
உருக்கமான வேண்டுகோள்!

நாங்கள் இதுவரைக்கும்
எழுதப்படாத கவிதைகள்
வரையப்படாத சித்திரங்கள்!

எங்களை எழுச்சி கொள்ள எழுதுங்கள்
வரலாறு சொல்ல வரையுங்கள்
வரப்போகும் வரலாறு
உங்களை வாழ்த்தும்
உங்களின் எழுத்துக்கள்
உணர்வுகளாய் உந்துதல் தர வேண்டும்!

உங்களின் சித்திரங்கள்
எங்களை சிந்திக்க வைக்க வேண்டும்!
உழைப்பில் மலரும் வியர்வைக்கு
ஒரு தனியான வாசமுண்டு!

அது காலம் செல்லச் செல்ல
வியாபித்து மணம் பரப்பச் செய்யும்!
அப்போது நிச்சயமாக
மனங்கள் மாறவே செய்யும்!
வரலாறு அதனை வாழ்த்தும்!!!

## வாழ்க்கை!

வாழ்க்கைச் சுமைகளில்
மூச்சுத் திணறி
மீள்வதற்குள்
மரணத்தின் குறியீடு
மனசை அழுத்த
கடந்து வந்த வாழ்க்கைப்
பாதையை ஒரு முறை
திரும்பிப் பார்க்கிறேன்....


உடுத்து உடுத்து
கந்தலாய்ப் போன
ஆடையைப் போல்
யாருக்குமே பயனற்றதாய்!!!

- தர்காநகர் றம்ஸியா





## எங்கள் வலி புரியும்?



கலைமகன் பைரூஸ்

மண்ணெண்ணையாலும்
மசகினாலும்
வயிறு வளர்க்கும் நாடுகளே...
உலகமயமாக்கப் பெயரோடு
கலாச்சாரத்தை
பூண்டோடு அழிக்கும்
மேற்கத்தேயமே...!

உங்களிடம் நாம் பணிபுரிவதை
நீங்கள் தப்பாக
கணக்கிலிடுகிறீர்கள்!
பொதிசுமக்கும் மாடுகளாய்
கைப்பொம்மைகளாய்
உங்களுக்கு நாங்களா?

நீங்கள் தங்கக் கிண்ணங்களில்
உடல்மினுக்கும் பெண்களை
சுவைத்துக்கொண்டு
அருந்துவனவெல்லாம்
எங்கள் உதிரம்; வியர்வை!
மாடாகப்படுத்துகிறீர்கள்
திரும்பிக்குத்த
எங்களுக்குத் தெரியும்
உங்கள் நாட்டில்
வயிறுகழுவ வந்துவிட்டோம்..
உங்கள் மீது எனக்கு
எந்தக் கோபமுமில்லை..
என்கோபமெல்லாம்
இறையாண்மையை அழித்து
மேலாண்மையை வகுத்து
சொல்லாண்மையை
தட்டிப்பறித்த
உன் மூதாதைமீதுதான்...!

ஒருவருடத்துக்குள்
ஓரிலட்சம் ஆண்டுகளின்
வேலை வாங்குகிறீர்கள்!
'இன்ஸான'
கூடிக்கூடிப்போனால்
அறுபதோ அன்றேல்
எழுபதோதான்
அநுபவிப்பான்!

நாங்கள் என்ன
உங்களைப்போல
மா.. மரமண்டைகளா
என்ன?
எங்கள் மனவலியின்
கடுகுவிதைகள்
ஒவ்வொன்றும்
உங்களுக்கு ஒருநாள்
வதைசெய்யும்...!
தம்பட்டம் அடிக்காதீர்கள்
உரத்துப் பேசாதீர்கள்
கருவிலிருந்து
வெளியேவிட்டவனை
அஞ்சுகிறோம்!

மாடுபடாத பாடுபடுகிறோம்
கோடான
கோடிபெறுகிறீர்கள்

எங்கள் வேதனை
எங்கள் மனவலி
உங்களுக்குத்
தெரியப்போவதில்லை
ஒன்று மட்டும் உண்மை!
எங்களுக்கு
உங்களுக்குள்ள
பாரிய நோய்கள் இல்லை
அவனே மாபெரியோன்..!

ஓரிரு ரியால்களை
ஓரிலட்சம் டாலர்களாய்
பார்க்கிறீர்கள்..
ஓரிரு டாலர்களை வைத்து
ஆன்மாவை மறக்கிறீர்கள்
மாமனிதன் என்ற
மாபெரும் பட்டங்கள் எல்லாம்
பரீட்சை எழுதாமலே
உங்களை அடைகின்றனவே!

கொஞ்சம் மனம் வையுங்கள்
நறுமணம் வீசலாம்
உங்கள் அழுக்குகளை
உங்கள் அசிங்க
அறைகளுக்குள்
கைவிலங்கிட்டு வையுங்கள்!

ஓரிரு நாட்களேனும்
எங்களையும் வாழவிடுங்கள்
எங்கள் உழைப்பில்
உப்புச்சாப்பிட
உயிர்கள்
காத்துக்கிடக்கின்றன!
உயிரோடு ஒட்டிப்பிறக்காததை
உங்கள் காசிலேயாவது
பெறமுயலுங்கள்
எங்கள் வலி புரியும்
உங்கள் வழி தெரியும்!!!

## செல்லக்குழந்தையாகியே!

பரபரத்தலையும் இயந்திர
கணங்களுள்ளே அன்பெனும்
பொன்விதை பிதுக்கி வீசப்பட்ட
சூனிய பூமி கூட ஒரு
வெங்காயந்தான்!

உரித்தும் ஒன்றுமற்ற இதில்
உள்வீடு செறிந்த உச்சத்து
மினாரமாய்...
விலா என்பு மூடும்
மேலாடையாய்..
தன் அகன்ற இறக்கை விரித்தே
அரவணைக்கும் தாய்ப்
பறவையாய்
உள்ளுக்குள் உறைந்து
நிறைந்து கிடக்கிறாயே...
முழுதுமாய் பூவாகிக்
கண்சிமிட்டுமோர்
மல்லிகைக் கந்துமாகியே
உன் ஈரப்பூக்களை
அள்ளிச்சொரிந்தபடி!

உன் திசை பார்த்து சொரிந்த
ஒற்றைப்பூவைக்கூட
தவறவிடாத நிதானங்களோடு
சேகரஞ்செய்தனைத்தையும்
உயிரின் மடல்களுக்குள்
நாருரிந்தே
நான் கோர்த்த மாலைக்காகவே
என்னளவுக்கும்
குறிக்குள்ளமாகியே
சூடிக்கொள்ள
தலை சரிக்கிறாயோ...
நம் செல்லக் குழந்தையாகியே!!

**- கிண்ணியா எஸ். பாயிஸா அலி**







# நூலகப்பூங்கா




பெயர் – நீ வரும் காலைப் பொழுது (கவிதை)
நூலாசிரியர் – வாழைச்சேனை அமர்
தொலைபேசி – 065 22 57378
வெளியீடு – யாத்ரா
விலை – 100/=



பெயர் – ஏ. இக்பால் அயிம்பது வருட
இலக்கிய ஆவணம்
தொலைபேசி – 034 5080784
வெளியீடு – தர்கா நகர் படிப்பு வட்டம்
விலை – 750/=



பெயர் – நதிகளைத் தேடும் சூரிய சவுக்காரம்
(கவிதை)
நூலாசிரியர் – கிண்ணியா ஏ. நஸ்புள்ளாஹ்
தொலைபேசி – 0775851347 / 0772257349
வெளியீடு – புன்னகை இலக்கிய வட்டம்
விலை – 200/=



பெயர் – மையித்தின் மீதெழும் புல்வெளி
(கவிதை)
நூலாசிரியர் – வெலம்பொட அமீன்
தொலைபேசி – 081 3804731
வெளியீடு – யாத்ரா
விலை – 150/=




பெயர் – குடையும் அடை மழையும் (கவிதை)
நூலாசிரியர் – கிண்ணியா ஏ.எம்.எம்.அலி
தொலைபேசி – 0772 765174
வெளியீடு – ஹாஜரா வெளியீட்டகம்
விலை – 250/=



பெயர் – முத்துக்கள் முப்பதுடன்
தொகுப்பாசிரியர் – எம்.பாஸி ஸுபைர்
தொலைபேசி – 0776 775620
வெளியீடு – தர்காநகர் நலன்புரிச்சங்கம்
விலை – 300/=



பெயர் – அந்தப் பௌர்ணமியில் (கவிதை)
நூலாசிரியர் – தர்கா நகர் றம்ஸியா
விலை – 150/=




பெயர் – மௌனத்தூரிகை (சிறுகதை)
நூலாசிரியர் – தர்கா நகர் றம்ஸியா
விலை – 150/=







பெயர் – கனா முறிந்த பகல் (கவிதை)
நூலாசிரியர் – முஹம்மது றபீக்
தொலைபேசி – 063 3632783
வெளியீடு – கலை கலாசார மன்றம்
விலை – 160/=




பெயர் – வரைபுகள் (கணிதம்)
நூலாசிரியர் – கணித ஆசிரியர் குழு
தொலைபேசி – 077 2242220 / 077 2200755
வெளியீடு – Fast நிறுவனம்
விலை – 280/=




பெயர் – தொலைதூர நிலவு (கவிதை)
நூலாசிரியர் – எம்.எஸ்.எம். ஸப்ராஸ்
தொலைபேசி – 075 7689118, 0712 909835, 0777 435117
வெளியீடு – மா/ இஸ்மாலியா வித்தியாலயம் மாத்தளை.
விலை – 190/=




பெயர் – விட்டு விடுதலை காண்
நூலாசிரியர் – மன்னார் அமுதன்
தொலைபேசி – 0714 442241
வெளியீடு – எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
விலை – 150/=




பெயர் – புள்ளியைத் தேடும் புள்ளி மான் (கவிதை)
நூலாசிரியர் – எஸ். நுஹா
தொலைபேசி – 067 22 60122
வெளியீடு – தேசிய கலை இலக்கியத் தேனகம்
விலை – 170/=



பெயர் – இதுவும் பிந்திய இரவின் கனவு தான் (கவிதை)
நூலாசிரியர் – கிண்ணியா ஜே. பிரோஸ்கான்
தொலைபேசி – 0779 300397
விலை – 200/=




பெயர் – மர்ஹூம் மஷ்ஹூர் கதைகள்
தொகுப்பு – சுஹைதா ஏ. கரீம்
தொலைபேசி – 0773 368573
வெளியீடு – சிந்தனை வட்டம்
விலை – 80/=



பெயர் – சிகரம் தொடவா (சிறுவர் கவிதை)
நூலாசிரியர் – கிண்ணியா எஸ்.பாயிஷா அலி
தொலைபேசி – 077 2267838
வெளியீடு – தி /குறிஞ்சாக்கேணி மகளிர் மகா வித்தியாலயம் இலக்கிய மன்றம்
விலை – 100/=







பெயர் – வெளிச்சம் (கவிதை)
நூலாசிரியர் – (புர்ஹா) பாயிஸா கைஸ்
தொலைபேசி – 0714 113041
விலை – 80/=



பெயர் – எரிகின்ற தீபங்கள் (சிறுகதை)
நூலாசிரியர் – பாயிஸா கைஸ்
தொலைபேசி – 0714 113041
வெளியீடு – எக்மி பதிப்பகம்
விலை – 120/=




பெயர் – சிறுவர் பா அமுதம்
நூலாசிரியர் – செ. ஞானராசா
தொலைபேசி – 077 5956789
வெளியீடு – சர்வீனா வெளியீட்டகம்
விலை – 140/=



பெயர் – ஓர் அபலையின் டயரி (சமூக நாவல்)
நூலாசிரியர் – ஏ.சீ. ஜரீனா முஸ்தபா
தொலைபேசி – 011 5020936
வெளியீடு – எக்மி பதிப்பகம்
விலை – 200/=

## வெலிகம ரிம்ஸா முஹம்மத்
## வெளியிட்ட நூல்கள்

தொலைபேசி – 077 5009 222




பெயர் – வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
வெளியீடு – சுஹறா பப்ளிகேஷன்
விலை – 120/=



பெயர் – கணக்கீட்டுச் சுருக்கம்
வெளியீடு – காயத்திரி பப்ளிகேஷன்
விலை – 350/=



பெயர் – கணக்கீட்டின் தெளிவு
வெளியீடு – இஸ்லாமிக் புக் ஹவுஸ்
விலை – 560/=



பெயர் – தென்றலின் வேகம்
வெளியீடு – இலங்கை முற்போக்கு
கலை இலக்கியப் பேரவை
விலை – 150/=



with Best Compliments From...

TOP QUEEN
Advertising Pvt (Ltd)

**Office -**
126/1, Main Street,
Kalmunai,
Sri Lanka.

0779027514,
0779593559

**Branch -**
37, Main Street,
Maligaikadu,
Sri Lanka.

0673673489
0774531111

with Best Compliments From...


Ismail Electrical

Single - 3phase wiring, Single & 3phase motors,
Water pump, Washing machine, Armatures,
Grinder, Drill, Fan, Generator

Rewinding and electrical appliances Repair

43/B, Circular Road,
Galle, Sri Lanka.
Mobile: 071 9201405





with Best Compliments From...

Luckyland




**LUCKYLAND BISCUIT MANUFACTURERS**

NATTARANPOTHA, KUNDASALE, SRI LANKA.
TEL - 0094 - 081 - 2420574, 2420217. FAX - 0094 - 081 - 2420740
Email - luckyland@sltnet.lk

9772012670007